Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# சஞ்சீவி

விலை ரூ. 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

மலே:- 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞு வைகாசி மீ 30 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 15 (13-06 1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:- 20

காங்கேசன் களஞ்சியத்தில்

# உணவு பொருள் எடுக்கச் சென்ற உயரதிகாரி, ஊழியர் மீது சூடு!

## இணைப்பதிகாரியின் அனுமதியும் உறுதியும் பெற்றுச் சென்றவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர்

— அலுவலகச் செய்தியாளர்: எஸ். ஜே. பி. ரட்ணதுரை —

யாழ்ப்பாணம், ஜூன் 13

மக்களுக்கு விநியோகிப்பதற்காக உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கென, காங்கேசன்துறையில் உள்ள களஞ்சியத்திற்குச் சென்ற உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பற்குணம், களஞ்சியப் பொறுப்பதிகாரி திரு. கே. கதிர்காமநாதன் ஆகியோர் மீதும் உணவுத் திணைக்கள ஊழியர்கள் மீதும் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

யாழ். மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியிடம் முன் அனுமதியும், அசம்பாவிதம் எதுவும் நடக்காது என்ற உறுதியும் பெற்றுச் சென்ற உணவுத் திணைக்கள அதிகாரிகள் - ஊழியர்கள், நேற்று மயிரிழையில் உயிர்தப்பினர்.

இச் சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:—

கடந்த புதன்கிழமை புலோலியில் நடைபெற்ற யாழ். அரச செயலக உயர் அதிகாரிகள் — இராணுவ உயர் அதிகாரிகள் சந்திப்பின் போது காங்கேசன் துறை களஞ்சியத்தில் உணவுப் பொருள்களை எடுப்பதில் உள்ள சிரமங்கள் பற்றி ஆராயப்பட்டன.

காங்கேசன் துறையில் சிப்பாய்கள் நடமாட்டம் இருக்கும்வரை களஞ்சிய ஊழியர்களோ, கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளோ உணவுப் பொருள்களை ஏற்றச் செல்ல மாட்டார்கள் என்று செயலக அதிகாரிகள் அப்போது வலியுறுத்திக் கூறினர்.

அதற்கு —

லொறிகள் வரும் போது இராணுவ நடமாட்டம் இருக்காதென்றும் —

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலடியில் தமிழ் பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் —

யாழ். மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் ஜெரி சில்வா அரச அதிபரிடம் உறுதியளித்திருந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் குண்டினால் 2 சிறுமிகள் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ் கோட்டை முகாமில் இருந்து நேற்று மாலை ஏவப்பட்ட ஷெல் குண்டினால் இரண்டு சிறுமிகள் உட்பட மூவர் காயமடைந்தனர்.

கடற்கரை வீதியில் உள்ள வீடு ஒன்றின் முன்பாக இந்த ஷெல் குண்டு விழுந்து வெடித்தது. வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு சிறுமிகள் காயமடைந்தனர்.

வீடும்சேதமடைந்தது.

அர்ச்சுனன் விஜேதினி (வயது 7), அர்ச்சுனன் மதிவதனி (வயது 9) எஸ். வீற்றேன் (வயது 20) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (உ-10)

அச்சுவேலி-இடைக்காட்டில்

## இணைப்பதிகாரியினால் சேதமுற்ற வீடுகளின் விவரங்கள் சேகரிப்பு

அச்சுவேலி, ஜூன் 13

அச்சுவேலி,இடைக்காடு பகுதிகளில் சேதமடைந்த-பாதிக்கப்பட்ட-வீடுகள் பற்றிய விவரங்களை வடபகுதி இணைப்பதிகாரி சேகரிக்கின்றார்.

அச்சுவேலியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் திரும்பிச் செல்லும் போது அச்சுவேலி, வயாவிளான் பங்குத்தந்தை வண. பிதா பெனட் ரென்சோ அடிகளிடம் விவரம் சேகரிப்பதற்கான படிவங்களை பொதுமக்களுக்கு விநியோகிக்குமாறு ஒப்படைத்துள்ளனர்.

சேதமடைந்த வீட்டுச் சொந்தக்காரர்களிடம் படிவங்களைக் கொடுத்து அவற்றைப் பூரணப்படுத்தியபின்னர் பலாலி இராணுவ முகாமில் அப்படிவங்களை நேரடியாக கையளிக்கும்படி இணைப்பதிகாரி ஜெரி சில்வா வண. பிதா பெனட் ரென்சோ அடிகளிடம் கேட்டுள்ளார். (உ-11)

## கண்ணிவெடியில் பொதுமக்கள் எவரும் உயிரிழக்கவில்லை

### புலிகள் விடுத்த அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடமராட்சியில் கடந்த வியாழனன்று நடைபெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் உயிரிழந்த அனைவரும் இராணுவத்தினரே. பொது மக்கள் எவரும் இச் சம்பவத்தில் கொல்லப்படவில்லை.

ஆனால் இச்சம்பவத்தின் பின்னர் அப்பகுதிக்குக் கொண்டுவரப்பட்ட 10 பொதுமக்கள் படையினரால் அவ்விடத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

— இப்படி விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## மண்டை ஓடுகளை ஏந்தி ஊர்வலம்

கோவை, ஜூன் 12

மண்டை ஓடுகளை ஏந்தியபடி கோயம்புத்தூரில் கடந்த வியாழன் ஊர்வலம் நடத்தப்பட்டது.

இலங்கைத் தமிழர், படுகொலைக்கு ஆளாவதைக் கண்டித்தே இந்த ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டது.

தமிழ் ஈழத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று ஊர்வலத்தில் கோஷம் எழுப்பப்பட்டது. (உ-எ)

விரைந்து தீர்வு காணும்படி

## ஸ்ரீலங்கா மீது இந்தியா தொடர்ந்து நிர்ப்பந்தம்

### திவாரி கூறுகிறார்

மாஸ்கோ, ஜூன் 12

இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணும்படி மனிதாபிமான, மனித உரிமை நடவடிக்கைகள் மூலம் ஸ்ரீலங்கா அரசுக்கு இந்தியா தொடர்ந்து நிர்ப்பந்தம் கொடுக்கும்.

இந்திய வெளியுறவு அமைச்சர் என். டி. திவாரி முன்கண்டவாறு தெரிவித்தார்.

மாஸ்கோவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் மத்தியில் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

இதைத்தான் நான் சோவியத் தலைவருக்கும் தெரிவித்தேன்.

இம் மாதம் 18 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற இருக்கும் சார்க் அமைப்பு வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டிலும் இதையே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தம் பற்றி புலிகளின் நிலைப்பாடு

சென்னை, ஜூன் 12

கைப்பற்றப்பட்ட தமிழ்ப் பகுதிகளில் இருந்து இராணுவம் வெளியேறும்வரை போர்நிறுத்தம் என்ற பேச்சுக்கு இடமில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கை இடைநிறுத்தம் என்பது மீண்டும் தாக்குதல்களை நடத்துவதற்கு ஏற்ற அவகாசத்தைப் பெறுவதற்கு இலங்கை அரசு கையாளும் தந்திரமே.

— இப்படி திரு. பாலசிங்கம் மேலும் தெரிவித்தார். (உ-எ)

### சுபநேரம்

13-06-1987

சனிக்கிழமை

சுபநேரம்:-

2.52 முதல் 4.22 வரை

ராகுகாலம்:-

8.52 முதல் 10.22 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## 'சார்க்' கூட்டம் நாளை ஆரம்பம்

புதுடில்லி, ஜூன் 13

சார்க் அமைப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர் மட்ட மாநாடு நாளை புதுடில்லியில் ஆரம்பமாகும்.

இந்த மாநாட்டில் அதிகாரிகள் மட்டத்திலேயே ஸ்ரீலங்கா பங்குபற்றும்.

இதை கொழும்பு வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் ஊர்ஜிதம் செய்தார்.

சார்க் மாநாட்டில் ஸ்ரீலங்கா கலந்துகொள்

(6 ஆம் பக்கம் பார்க்க)




## மீனவர் தொழிலுக்கு சென்றனர்

சென்னை, ஜூன் 13

கடந்த வியாழக்கிழமை முதல் இராமேஸ்வரம் மீனவர்கள் கடற் தொழிலுக்குச் சென்றனர்.

இவர்களை இந்திய கடல் எல்லைக்குள்ளேயே மீன்பிடிக்குமாறு தமிழ் நாடு அரசு பணித்துள்ளது.

இலங்கை கடற்படையினரின் அச்சுறுத்தல் காரணமாக இவர்கள் கடந்த வாரம் முழுவதும் தொழிலுக்குச் செல்லவில்லை. (அ-எ)

## கச்சதீவு உடன்பாடு: ரத்துச் செய்யுமாறு மீனவர் கோரிக்கை

இராமனுதபுரம், ஜூன் 12

கச்சதீவுகுறித்து இலங்கையுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை ரத்துச்செய்யும்படி இந்திய அரசாங்கத்துக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இராமனுதபுரம் மாவட்ட மீனவர் சங்கம் அனுப்பிய மகஜரில் இக்கோரிக்கை அடங்கியுள்ளது.

1974இல் கச்சதீவு இலங்கையிடம் கையளிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக ஏற்பட்ட உடன்பாட்டின் படி இந்திய மீனவர்கள் கச்சதீவுக் கடலில் மீன் பிடிக்கவும் கச்சதீவில் மீன், வலைகளைக் காயப் போடவும் இடமளிக்கின்றது.

ஆனால், இலங்கைக் கடற்படை அந்த உரிமைகளை இந்திய மீனவருக்கு மறுத்துவருகின்றது.

இப்படி மகஜரில் கூறப்பட்டுள்ளது. (-எ)

## வடமராட்சியில் யாழ் செயலகம்?

யாழ்ப்பாணம், ஜூன், 13

யாழ் மாவட்டச் செயலகத்தை வடமராட்சிக்கு மாற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக மிக நம்பிக்கையாகத் தெரியவருகிறது.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள இப்பகுதியில் பொலீஸ் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

மேலும் வங்கிக் கிளைகளையும் அரச செயலகத்தையும் இப் பகுதியில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவாம்.

இதேவேளை மேலும் பல அரச அலுவலகங்களும், தபாற் கந்தோரும் அங்கு திறக்கப்பட இருக்கின்றன.

வடமராட்சிப் பகுதியில் சகல சிவில் நிர்வாகத்தையும் ஏற்படுத்தியபின் யாழ்ப்பாணம்மீதும் தாக்குதல்நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுவருகின்றது என அஞ்சப்படுகிறது. (உ-10)

பிரிட்டிஷ் தேர்தல்

## 3 ஆவது முறையாக தட்சர் பிரதமர்

லண்டன், ஜூன் 12

பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி மீண்டும் பதவிக்கு வந்துள்ளது.

இந்த நூற்றாண்டில் பிரிட்டனில் தொடர்ந்து மூன்றாவது முறையாக பிரதமர் பதவி வகிக்கும் பெருமை திருமதி மார்கரட் தட்சருக்குக் கிடைத்து உள்ளது.

650 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு 374 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

ஏனைய கட்சிகளுக்குக் கிடைத்த ஆசனங்கள் வருமாறு;

தொழில் கட்சி - 229.
சமூக ஜனநாயக லிபரல் கூட்டணி-21.
வெல்ஷ் ஸ்கொட்ச் – 6.

செய்தி அச்சுக்குப் போகும் வரை 20 தொகுதி முடிவுகள் வெளியாகவில்லை.

பெரு வெற்றியீட்டியிருக்கும் பிரிட்டிஷ் பிரதமரை வாழ்த்தி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி செய்தி ஒன்றை நேற்று அனுப்பி வைத்தார்.

(உ-எ)

## கருத்துக் கலசம்

### தமிழர் தலைமுறைகள்

ஒரு நாட்டின் எதிர்காலப் பிரசைகள் யார்? இன்றைய இளைஞர்களும், சிறுவர்களும் தான்!

இப்போது இளைஞர்களாக உள்ளவர்கள் வயது முதிர்ந்த பரம்பரைக்கு அடுத்ததலைமுறை ஆவார்கள். சிறுவர்கள் அவர்களுக்கும் அடுத்த சந்ததியினர் ஆவார்கள்.

ஈழத் தமிழர்களுக்கும் இந்தப் பொது விதி பொருந்தும். இப்போது முதியவர்களாக — பெரியவர்களாக இருப்பவர்கள் வாழ்ந்து கழித்தவர்கள். இளைஞர்களும், சிறுவர்களும் இனித்தான் வாழப் போகிறவர்கள்.

எதிர்காலம் அவர்களுடையது. அதனால் அவர்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றி இப்போதே அக்கறை கொள்வது இயல்பு.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் இளைஞர்களே அதிகம் முன்னணி வகிப்பதற்கு எதிர்கால அக்கறையும் ஒரு காரணம் எனலாம்.

இளைஞர்கள் அடுத்த பரம்பரையினர் மட்டுமன்றி, இப்போதுள்ள சிறுவர்களுக்கு அடுத்து வரும் தலைமுறையின் தந்தையருமாவர்.

மொத்தத்தில் இப்போது இளைஞர்களாக இருப்போர் இரண்டு சந்ததிகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். அதே போல சிறுவர்களும் இரண்டு தலைமுறைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

இன்றைய இளைஞர்களையும், சிறுவர்களையும் அழிப்பது தமிழர்களின் நான்கு தலைமுறைகளை அழிப்பதற்கு ஒப்பாகும்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் இப்போது இந்தத் தலைமுறைகளை அழிப்பதில் தான் வெகு கனகச்சிதமாக ஈடுபட்டு வருகிறது!

பயங்கரவாதிகள் ஒழிப்பு என்ற பெயரில் அரச படைகள் அப்பாவி இளைஞர்களையும், பால் மணம் மாறாப் பச்சிளம் பாலகர்களையும் சிறுவர்களையும் கொன்றொழித்து வருகின்றன. இது தமிழின ஒழிப்பின் மிக ஆழமான சதியாகும்.

வடமராட்சியைச் சேர்ந்த சுமார் நாலாயிரம் தமிழ் இளைஞர்கள் கைதானது பற்றிக் குறிப்பிட்ட "லண்டன் சண்டே டைம்ஸ்" அந்தப் பகுதித் தமிழர்கள் ஒரு தலைமுறையையே இழந்துவிட்டதாகக் கவலை தெரிவித்தது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் வான், தரைத் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் இளைஞர்களும், சிறுவர்களும் என்பதை உலகம் அறிந்தால் என்ன சொல்லும்...?

இருபத்தொரு நாள் குழந்தையும் ஷெல் தாக்குதலால் பாதிக்கப்பட்டது என்றால் ஸ்ரீலங்கா நடத்தி வருவது தமிழர் இன ஒழிப்பு மட்டுமல்ல; தலைமுறை ஒழிப்பு — பூண்டோடு அழித்தல் ஆகும்.

சர்வதேச இளைஞர் ஆண்டு, சர்வதேச சிறுவர் ஆண்டு எனக் கொண்டாடும் சர்வதேசங்கள் இதனைக் கவனத்தில் கொள்ளுதல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

# தட்சரின் வெற்றி நூற்றுண்டுச் சாதனை!

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் திருமதி தட்சரின் கன்சர்வேட்டிவ் கட்சி 100க்கு மேற்பட்ட பெரும்பான்மை ஆசனங்களுடன் மீண்டும் அமோக வெற்றியீட்டி உள்ளது.

1964 ஆம், 74 ஆம் ஆண்டுத் தேர்தல்களில் பிரிட்டனின் தொழிற் கட்சிப் பிரதமர் ஹரோல்ட் வில்சன் போன்று சிறிய பெரும்பான்மையுடனேயே திருமதி தட்சர் மீண்டும் பதவிக்கு வருவார் என்ற அரசியல் ஊகங்கள் எல்லாம் தவிடு பொடியாகி விட்டன.

இரும்புச் சீமாட்டியின் இரும்புக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி இது என்று அவதானிகள் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

61 வயது நிரம்பிய திருமதி தட்சர் இந்த வெற்றி மூலம் இன்னும் 5 வருடகாலத்துக்கு பிரிட்டிஷ் பிரதமராகப் பதவி வகிப்பார்.

தொடர்ந்து மூன்று பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்றது மூலம் நூற்றுண்டுச் சாதனை ஒன்றை அவர் நிலை நாட்டி உள்ளார்.

இந்த வெற்றி கன்சர்வேட்டிவ் கட்சிக்குக் கிடைத்த வெற்றி என்று கூறுவதைவிட திருமதி தட்சரின் தனிப்பட்ட செல்வாக்குக்குக் கிடைத்த வெற்றி என்றே கூறலாம்.

பிரிட்டனின் புதிய நாடாளுமன்றம் அதாவது காமன் சபை எதிர்வரும் 17 ஆம் திகதி கூடி புதிய சபாநாயகரைத் தெரிவு செய்யும். எம். பிக்கள் பதவிப்பிரமாண வைபவமும் அன்றே நடைபெறும். 25 ஆம் திகதி மகாராணியாரால் நிகழ்த்தப்படும் சிம்மாசனப் பிரசங்கத்தில் கன்சர்வேட்டிவ் கட்சியின் கொள்கைகள்-திட்டங்கள் அறிவிக்கப்படும்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தந்தையாகக் கருதப்படும் பிரிட்டன் 650 தொகுதிகளைக் கொண்டது.

இங்கிலாந்து 523 தொகுதிகளையும் ஸ்கொட்லாந்து 72 தொகுதிகளையும் வேல்ஸ் 38 தொகுதிகளையும் வட அயர்லாந்து 17 தொகுதிகளையும் கொண்டுள்ளன.

4 கோடியே 46 லட்சம் வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிக்க உரித்துடையவர்கள், இதை எழுதும்வரை தேர்தலில் வாக்களித்தோரின் எண்ணிக்கை விவரங்கள் அறிவிக்கப்படவில்லை.

பிரிட்டனில் கடைசியாகத் தேர்தல் நடந்தது 1983 ஜூன் மாதம் ஆகும்.

1983 தேர்தலில் இருந்த கட்சி நிலவரம் வருமாறு:-

கன்சர் வேட்டிவ் — 391
தொழிற்கட்சி — 204
லிபரல் — 19
சோஷல் ஜனநாயக— ஸ்கொட்டிஷ் நஷனல்— 2
வேல்ஸ் நஷனலிஷ்ட்—2
உல்ஸ்ரர் யூனியன் (வட அயர்லாந்து) —10
ஜனநாயக யூனியனிஸ்ட் (வட அயர்லாந்து) — 3
உல்ஸ்ரார் பொப்பியூலர் யூனியனிஸ்ட் (வட அயர்லாந்து) — 1
சோஷல் ஜனநாயக — தொழிற்கட்சி (வட அயர்லாந்து) — 2
சின்பின் (வட அயர்லாந்து) — 1
சுயேச்சை — 1



மாகிரெட் தட்சர்

ஒரு சபாநாயகரும் மூன்று பிரதிச் சபாநாயகர்களும் நான்கு தொகுதிகளைப் பிரதிநிதித்துவம் வகிக்கிறார்கள்.

1956 இல் சேர், அன்ரனி ஈடனின் பதவிக் காலத்துக்குப் பின்னர் படை எடுப்புக்களை நடத்திய பெருமை தட்சர் அம்மையாரையே சாருகின்றது.

ஆனால் இதுமூலம் திருமதி தட்சர் தமது செல்வாக்கை உயர்த்திக் கொண்டுள்ளார்.

போக்லாந்து யுத்தத்தின் பின்னர் அவரின் செல்வாக்கு அதிகரித்ததை பொதுசன அபிப்பிராயக் கணிப்புகள் தெளிவுபடுத்தி இருந்தன.

**பாதுகாப்புக்கொள்கை**

திருமதி தட்சரின் வெற்றிக்கு மற்றும் ஒரு காரணம் அவரது பாதுகாப்புக் கொள்கைகளே.

கன்சர்வேட்டிவ் கட்சியினால் மட்டுமே பிரிட்டனைப் பாதுகாக்க முடியும் என்று தேர்தல் பிரசாரங்களின் போது அவர் தெளிவாகக் கூறி இருந்தார்.

பிரிட்டனில் உள்ள அணுசக்தி ஏவுகணைத் தளங்களை அகற்றும் தொழிற்கட்சித் தலைவர் நீல்கி நொக்கின் கொள்கைகளை அவர் கடுமையாகச் சாடி வந்தார்.

அணுசக்தி ஏவுகணைகளை அகற்றுவதற்குப் பதில் தற்போதுள்ள பழைய கால ஏவுகணைகளை அகற்றி விட்டு 1990 ஆண்டில் நவீன ரக ஏவுகணைகளைப் பொருத்தும் தனது திட்டத்தை திருமதி தட்சர் அறிவித்திருந்தார்.

சில வருடங்களுக்கு முன்னர் அதிகரித்திருந்த வேலையில்லாதோர் எண்ணிக்கையில் இந்த வருடம் ஏற்பட்ட திடீர் வீழ்ச்சியும் திருமதி தட்சருக்கு சாதகமாக அமைந்து விட்டது.

பிரிட்டனின் யுத்த காலப் பிரதமர் சேர். வின்சென்ட் சேர்ச்சிலுக்குப்பின்னர் புகழ்பெற்ற பிரதமர் என்ற ஸ்தானத்துக்கு இந்த தேர்தல் வெற்றி மூலம் திருமதி தட்சர் தம்மை உயர்த்திக் கொண்டுள்ளார்.

பிரிட்டனில் மூன்றாவது கட்சியாக உருவெடுக்கும் என்று எதிர்பார்த்த லிபரல் — சமூக ஜனநாயகக் கட்சிக் கூட்டணி எதிர்பார்த்த ஆதரவைப் பெறத் தவறியதும் — தொழிற்கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட்ட கறுப்பு இன வேட்பாளர்கள் சிலர் வெற்றி பெற்றதும் பிரிட்டிஷ் தேர்தலில் மற்றும் சில குறிப்பிடத்தக்க அம்சங்கள் ஆகும். ★

உலக உலா — என்.பி. சீலன்

## இலங்கை இனப்பிரச்சினையில் மனிதாபிமான உதவிக்கே இந்தியா இப்போது முதலிடம்

தர்மிஷ்டர் மீண்டும் உபதேசத்தை ஆரம்பித்துவிட்டார்.

விமானம் வந்ததில் இருந்து கடைப்பிடிக்கப்பட்டுவந்த மௌனம் கடந்த புதனுடன் கலைந்தது.

பின்னர் பொசன் அன்றும் பேசினார்.

எல்லாம் பாரதத்துக்கான உபதேசமாகவே இருந்தது.

வன்செயல் பாதையை விட்டு இந்திய, தமிழக

### உபதேசம் கூறிக் காலம் கடத்த தர்மிஷ்டர் மீண்டும் முயற்சியா?

அரசுகள் விலகிச்செல்ல வேண்டும் என்பதே என் விருப்பம் — இப்படி தர்மிஷ்டர் கூறினார்.

புத்தர், காந்தி, நேருஜி காட்டிய பாதை என்னுடையது. அந்தப் பாதையை இந்தியா மறந்துவிட்டது—இப்படியும் தர்மிஷ்டர் சொல்லிவிட்டார்.

இந்தியாவோ பேச்சை விடுத்துசெயலில் இறங்கிவிட்டது:

ஆனால் தர்மிஷ்டரோ 'உபதேசம்' கூறி காலத்தைக் கடத்தலாம் என்று பார்க்கின்றார்.

காலம் கடத்தும் முயற்சியில் ஒன்றுதான் யாழ் குடாவில் இராணுவ நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது என்ற செய்தி.

அமைச்சர் அத்துலத் முதலி அவசரமாக ராய்ட்டர் செய்திஸ்தாபனத்துக்கு தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு இதனை அறிவித்தார்.

இந்த 'இடை நிறுத்தல்' காலத்தில் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இராணுவம் தனது நிலையை ஸ்திரப்படுத்தும்; சிவில் நிர்வாகத்தை மேற்கொள்ளும்-என்றும் அமைச்சர் லலித் கூறியிருக்கிறார். இதன் அர்த்தம் என்ன?

கொழும்பின் அறிவிப்பை உன்னிப்பாகக் கவனிக்கின்றோம்—இப்படி இந்திய அரசு தெரிவித்துள்ளது.

இராணுவத் தந்திரம் இது என்று பி.பி.சி வர்ணித்தது.

இடைநிறுத்தற் காலத்தில் பேச்சுக்கள் நடத்த தீவிரவாதிகள் முன்வரா விட்டால் மீண்டும் இராணுவ நடவடிக்கை தொடரும்—இப்படிக் கூறிமறுநாளே 'குட்டை' உடைத்து விட்டார் அமைச்சர் லலித்.

கொழும்பு அரசாங்கத்தை இந்தியா இனியும் நம்பத் தயாராக இல்லை.

புதுடில்லியின் நடவடிக்கைகள் இதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

**நிவாரண உதவி**

இப்போது புதுடில்லி முன்னுரிமை கொடுத்து வரும் ஒரு விஷயம், மனிதாபிமான உதவிகள் யாழ் குடா மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதே.

எவ்வளவு விரைவாக நிவாரண உணவுப் பொருள்களை யாழ்ப்பாணம் அனுப்பமுடியுமோ அவ்வளவு விரைவாக அனுப்பி வைக்க வேண்டும்— இதனைச் செய்வதில்தான் இன்று இந்தியா ஈடுபட்டுள்ளது. இதற்கான பேச்சுக்கள் கொழும்பில் புதன் ஆரம்பமாகின.

உணவுப் பொருள் விநியோக வழி முறைகள் பற்றிய தனது நிலைப்பாட்டை இந்திய அரசு இலங்கைக்கு சமர்ப்பித்து விட்டது.

வியாழன் இந்தியத் தூதர் டிக்ஸிற் இந்திய நிலைப்பாட்டை வெளியுறவு அமைச்சர் ஹமீதுவிடம் கையளித்தார்.

இலங்கையின் பதில் இரண்டொரு தினங்களில் தெரியவரும் என்று கூறப்படுகின்றது.

இதனிடையில் இலங்கையின் பதிலை எதிர்பார்த்து புதுடில்லியில் புதன்கிழமை தொடக்கம் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் காத்திருக்கின்றார்.

இந்திய நிவாரணப் பொருள்களை யாழ்ப்பாணத்தில் விநியோகிப்பதற்கு இந்திய அரசு கூறியுள்ள வழிமுறைகள் எவை என்பது இன்னும் வெளியிடப்படவில்லை.

அவற்றில் சிக்கல் உண்டா? இல்லையா? என்பது இலங்கையின் பதிலில் தான் தெரிய வேண்டும்.

இனப் பிரச்சினையில் 'மனிதாபிமானம்' தான் இன்று முதலிடம் பெற்று உள்ளது.

**மனிதாபிமானத்துக்கு முதலிடம்**

புதுடில்லி மனிதாபிமானத்துக்குத்தான் முன்னுரிமை கொடுத்துள்ளது.

அதனால் தான் மனிதாபிமானப் பேச்சுக்கள் இப்போது நடக்கின்றன.

இதற்கு முடிவுகண்ட பின்னர் தான் இனப் பிரச்சினைப் பேச்சுக்கள். இதுதான் இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடு போலத் தெரிகிறது.

இந்தியாவின் இந்த நிலைப்பாட்டுக்கு ஊக்கமளிப்பது போன்று அமெரிக்காவின் பிரபல செனட்டர் ஒருவர் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

அவர் வேறுயாரும் அல்லர். அமெரிக்க செனட்டில் ஆசிய - பசுபிக் பிராந்தியத்துக்கான வெளியுறவுக் கமிட்டித் தலைவரான செனட்டர் ஸ்டீபன் ஸோலஸ்லே இப்படிக் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

மனிதாபிமான முறையில் இந்தியா என்ன செய்ய திட்டமிட்டுள்ளதோ அத்தனைக்கும்

உள்ளும் புறமும்

ஆதரவளிப்பது போன்று அவரின் கருத்து அமைந்துள்ளது.

செனட்டர் ஸோலார்ஸ் சொல்கிறார்.

''குண்டு போடுவதை விட உணவுப் பொதிகளைப் போடுவது மேலான செயல்.

'ஒரு அசாதாரண நிலையில் ஒரு நாட்டில் இன்னொரு நாடு தலையிடக்கூடாது என்ற கொள்கையை விட மனித சமுதாயத்தைக் காப்பாற்றும் மனிதாபிமான செயல்களில் ஈடு (6 ஆம் பக்கம் பார்க்க

## அச்சுவேலியில் அரச படைகளின் 4 நாள் "ஆட்சி"; அந்த ஊர் மக்களை வாட்டிய பல அட்டூழியங்கள்!

**நான்** வளர்த்த நாயைத் தவிர மற்றைய எல்லாவற்றையும் இராணுவத்தினர் பிடித்து உண்டு விட்டனர்.

நான் படுத்த பாயைத் தவிர மற்றைய எல்லாவற்றையும் கொள்ளையர் சுருட்டிக் கொண்டு விட்டனர்.

ஆக மிஞ்சியது துண்டாகிப்போன தும்புக் புக்கட்டை ஒன்றுதான்.

—இவ்வாறு அங்கலாய்ப்புடன் கூறியவர் அச்சுவேலியைச் சேர்ந்த ஓர் ஆசிரியர்.

அச்சுவேலியில் அரச படைகள் நான்கு நாட்களாக முகாமிட்டிருந்த பின் 9 ஆம் திகதி பழைய பலாலி முகாமுக்குத் திரும்பியிருந்தனர்.

சிப்பாய்கள் திரும்பிச் சென்றதும் தமது உடைமைகளை, உறவுகளைப் பார்க்க அச்சுவேலி மக்கள் ஊருக்குப் படையெடுத்தனர்.

அப்படி வந்த ஒரு அச்சுவேலி ஆசிரியரே மேற்கண்டவாறு கூறினார்.

அவரது வீட்டை துப்புரவாகத் துடைத்து விட்டிருந்தனர் சிப்பாய்களும், கொள்ளையரும்.

அவரது வீடு மட்டுமல்ல அச்சுவேலிப் பகுதியில் அனேகரின் வீடுகளிலும் அதே நிலைதான்.

வீடுகள் மட்டுமல்ல கடைகளுக்கும் அதே கதிதான்.

அச்சுவேலிச் சந்தியில் உள்ள ஒரு கடையில் தோலிருக்க சுளை விழுங்கியிருந்தனர் கொள்ளையர். கடை பூட்டியிருக்க கூரை வழியே புகுந்து கொள்ளையடித்துள்ளனர்.

வீடியோக்கடை ஒன்றும் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது.

பல வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்கள் சாக்குகளில் கட்டப்பட்டிருந்தன.

கடைசி நேரத்தில் அவை கொண்டுபோகப் படாமல் கைவிடப்பட்டிருந்தன.

**வேலி இல்லா அச்சுவேலி**

அனேகமானோர் தமது பொருள்களை அடுத்த வீடுகளிலேயே கண்டெடுத்தனர்.

சிப்பாய்கள் அந்த வகையில் பண்டமாற்ற வேலைகளைச் செய்திருந்தனர்:

அச்சு'வேலி'— ஊரின் பெயரில் தவிர பாதி வீடுகளில் வேலி இல்லை.

வேலிகளை, மதில்களை எல்லாம் ஆங்காங்கே உடைத்து அவசரப் பாதைகளை உருவாக்கியிருந்தனர் சிப்பாய்கள்.

உடைந்த மதிற் கற்களை வீதிகளில் பாதுகாப்பு அரணாக அடுக்கியிருந்தனர்.

இவ்வார சம்பவம்

வீடுகளில் இருந்த நெல் மூடைகள் மண் மூடைகளாக மாற்றி அடுக்கப்பட்டிருந்தன.

**தேவாலயத்தில் தஞ்சம்**

சிப்பாய்களுடன் மூன்று நாட்கள் பணயக் கைதியாக இருந்த ஒருவர் தமது அனுபவத்தைப் பின்வருமறு விவரித்தார்.

இம்மாதம் 7 ஆம் திகதி காலை திடீரென ஊரடங்கு உத்தரவு உள்ளூர் வானொலி மூலம் அறிவிக்கப்பட்டது.

ஊர்மக்கள் உடனேயே தமது உடைமைகளை விட்டுவிட்டு அயலூர்களுக்கு ஓடினர்.

எனது வயதான தாயார் நடக்க முடியாத நிலையில் இருந்ததால் நான் அவருடன் அச்சுவேலி புனித குசையப்பர் தேவாலயத்தில் தஞ்சமடைந்தேன்.

அங்கே எம்முடன் சுமார் இருநூறு பேர் வரை இருந்தோம்.

காலை 8 மணியளவில் ஹெலி ஒன்று சுற்றியபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

தூரத்தேவயாவிளான் பகுகளிலிருந்தும் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன.

நேரம் செல்லச்செல்ல துப்பாக்கிச் சத்தங்கள் எம்மை நெருங்கின. எமது இதயங்கள் பயத்தால் நொருங்கின.

மாலை 4 மணியளவில் சிப்பாய்கள் எமது கோவிலைச் சுற்றி வளைத்தனர்.

எம்முடன் இருந்தவர்கள் அனைவரும் வயதானவர்களும், குழந்தைகளும், பெண்களுமே. ஆக மூன்று இளைஞர்கள் மட்டுமே இருந்தனர்.

எம்முடன் எமது கோவில் குருவானவரும் இருந்தார்.

சிப்பாய்களின் கப்டின் குருவானவரிடம் ''ஏன் உங்கள் ஊரில் இளைஞர்களே இல்லையா? என்று வினவினார்.

அதற்கு குருவானவர் ''இங்குள்ளவர்கள் தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டனர்'' என்றார்.

எம்மை சுற்றியுள்ள பகுதியில் சிப்பாய்களும் போராளிகளும் போராடிக் கொண்டிருந்தனர். துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும், ஷெல் குண்டுச் சத்தங்களும் கேட்ட வண்ணமிருந்தன.

நாம் என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்ற பயத்தில் 3 நாட்களைக் கழித்தோம்—இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தேவாலயத்தில் அவரோடு கூட கோவிலில் தங்கியிருந்த முன்னாள் அரச ஊழியர் ஒருவர் தமது அனுபவத்தைத் தெரிவித்தார்.

**அடையாளக் கார்ட் எடுக்கச் சென்றவர்**

எம்மோடு தம்பிராசா பரமராசா என்னும் இளைஞனும் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்தார்.

அவரது தாயார் அவரது அடையாள அட்டையுடன் பயத்தினால் பக்கத்து ஊருக்குச் சென்று விட்டார்.

இதனால் இளைஞன் பெரும் பீதியுடன் காணப்பட்டான். சிப்பாய்கள் தம்மை கைது செய்து பூஸா விற்கு கொண்டு போவார்களோ என அஞ்சினார்.

தான் வீடு சென்று தனது அடையாள அட்டையை எடுத்து வர விரும்புவதாக எம்மிடம் கூறினார்.

நாமோ அவரை வெளியே போகவேண்டாம் என மறித்தோம்.

★ எஸ். ஜே. பி. ரட்ணதுரை ★

எமது எச்சரிக்கையையும் மீறி அவர் எம்மை விட்டுச்சென்றார்.

செல்லும்போது தமது சேர்ட்டை கழற்றி கழுத்தில் சுற்றியிருந்தார். கைகளில் வீட்டுத் திறப்புக்கோர்வையை வைத்திருந்தார்.

அவர் சென்ற சில நிமிடங்களில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

நாம் வெளியே வந்து அவர் சென்ற பாதையைப் பார்த்தோம்.

தேவாலயத்தில் இருந்து இருநூறு யார் தூரத்தில் சிப்பாய்கள் சிலர் ஏதோ எரித்தபடி நின்றனர்.

நாம் மாலையில் அங்கே சென்று பார்த்தபோது சில எலும்புகள் கருகிக் கிடந்தன. பக்கத்தே அந்த இளைஞன் திறப்புக்கோர்வையும், சேர்ட்டும் கிடந்தன — இப்படி ஒரு சோகக்கதையைக் கூறினார் அந்த முன்னாள் அரச ஊழியர்.

இவ்வாறு அச்சுவேலியில் பல இடங்களில் பல பிணங்கள் எரிக்கப்பட்டிருந்தன. பல எரிக்கப்படாமல் நாய்களால் இழுக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு எரிக்கப்படாமல் ஒரு பதுங்கு குழியில் இருந்த ஆறு சடலங்களை ஊர்மக்கள் எடுத்து எரித்தனர்.

அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கு அருகில் உள்ள நாவற்காட்டு வீதிகளிலேயே அதிக சடலங்கள் அனுதைப் பிணங்களாக அழுகிக் கிடந்தன.

**வீடுகள் சேதம்**

சிப்பாய்கள் நடத்திய ஷெல் தாக்குதலில் நூறுக்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன.

காட்டுமலை கந்தசாமி கோயிலில் ஷெல்விழுந்து கோயில் மண்டபம் தேர், தேர்முட்டி என்பன பலத்த சேதமடைந்துள்ளன. ஷெல் விழுந்த நேரம் கோயிலில் தஞ்சம் புகுந்திருந்த ஆலய பூசகர், நித்திய மேளக்காரர் ஆகியவர்களும் காயமடைந்தனர்.

**கும்பிடப்போன இடத்தே....**

கோவிலிற்கு வழிபடச் சென்ற பெண்மணி ஒருவர் வீதியில் விழுந்த ஷெல் தாக்கி மரணமானார்.

**கன்னியாஸ்திரி**

சிப்பாய்கள் முகாம் அமைத்திருந்த [illegible] வித்தியாலயத்தில் சிப்பாய்கள் தம்முடன் விடுதி மாணவிகளையும், கன்னியாஸ்திரிகளையும் பணயமாக வைத்திருந்தனர்-

கன்னியாஸ்திரி ஒருவர் தமது அனுபவத்தைக் கூறுகையில்—

அச்சுவேலியை வந்தடைந்த சிப்பாய்கள் பெரும் சிரமத்தின் மத்தியில்: போராளிகளின் கடும் எதிர்ப்பின் மத்தியிலேயே பாடசாலையை கைப்பற்றமுடிந்தது.

இதனால் சிப்பாய்கள் பெரும் சீற்றமடைந்தனர், நாம் என்ன நடக்குமோ என அஞ்சியபடி மேசைகளின்கீழ் ஒளிந்திருந்தோம்.

சீற்றத்துடன் வந்த சிப்பாய்கள் எமது பாடசாலை ஊழியரான ஓர் வயோதிபரை நையப் புடைத்தனர்.

எம்மை நெருங்கிய சிப்பாய்கள் ஏன் புலிகளுக்கு இங்கே இடம் கொடுத்தீர்கள் எனச் சீறினார்.

தெய்வாதீனமாக எம்மை ஏதும் செய்யாது சென்றனர். மூன்றுநாட்களாக நாம் மரண பயத்துடனேயே இருந்தோம்.

எமது கண்முன்னாலேயே சிப்பாய்கள் ஷெல் குண்டுகளை கண்டபடி ஊர் மனைகளை நோக்கி ஏவினர்.

ஷெல் சத்தங்களால் நாம் மிகவும் பயந்து நாள் முழுவதும் அறை ஒன்றுக்குள் குப்புறப் படுத்து அடையுண்டு கிடந்தோம்.

—இவ்வாறு அந்த கன்னியாஸ்திரி கூறினார்.

அச்சுவேலியில் இருந்து அகதியாக வெளியேறிய ஒருவர் தமது அனுபவத்தைப் பின்வருமாறு கூறினார்.

திடீரென அரசு ஊரடங்கை பிறப்பித்ததால் ஊர்மக்கள் ஏங்கிப் போயினர்.

பலர் தம்முடன் எதை எடுத்துக் கொண்டு செல்வது என்று அங்கலாய்த்தபடி வீடுகளில் அங்கும் இங்கும் ஓடினர்.

இறுதியில் ஏதும் எடுக்காமல் வெறுங்கையுடன் வெளியேறினர்.

வீதிகளில் மக்கள் அகதிகளாக — அவதியாக சென்ற காட்சி கல்மனதையும் கலங்க வைக்கும்.

வயோதிபர்கள், நோயாளிகள் நடக்க முடியாது இரண்டு அடிகளுக்கு ஒருமுறை இருந்து, ஆறி, அவசரப்பட்டு எழும்பி விழுந்து நடந்த காட்சி காணச் சகிக்காதவை.

ஒருவர் தனது சைக்கிளில் ஓர் பெட்டிகட்டி அதில் தனது மகளை இருத்தி வந்தார்.

கால் நடக்கமுடியாத அந்தப் பெண்ணே ஆட்டுக்குட்டி போல் அந்த சைக்கிள் பெட்டிக்குள் கிடந்தார்.

மேடு பள்ளங்களில் சைக்கிள் குலுக்கிய போதெல்லாம் அப்பெண்ணின் தலையும், கால்களும் பெட்டிக்கு வெளியே தொங்கிக் குலுங்க தந்தை சைக்கிளை வேகமாக ஓட்டிச் சென்றார் — என்றார் அவர்.

**ஊருக்கு ஊரோடும்...**

இன்னும் ஓர் அகதி தமது அனுபவத்தைக் கூறுகையில்—

நாம் திருமலையிலிருந்து அகதியாக வயாவிளானில் தங்கியிருந்தோம்.

வயாவிளானில் நடந்த அசம்பாவிதங்களால் அச்சுவேலியில் தஞ்சம் புகுந்தோம்.

அகதியாக இருக்கும் நாம் இன்று அங்கிருந்தும்வெளியேறி ஊரோடிகளாக அலைகின்றோம்.

எம்மால் பசி பட்டினி மழை, பனிகளையும் தாங்கமுடியும்; எம்குழந்தைகளால் முடியுமா?— என்று ஏக்கத்துடன் கேட்டார் அவர்,

அவரது குழந்தைகள் கட்டிய கந்தலைக் கழற்ற மாற்றின்றி ஒட்டிய வயிறுடனும் ஒருநேர உணவுடனும் தளர்ந்து சோர்ந்து காணப்பட்டனர்.

நாம் அகதிகளாகச் செல்லுமிடம் எங்கும் சிப்பாய்களும் தொடர்ந்து முகாமிட்டதால் இனி எங்கே அகதியாகப் போவோம்?

இந்தக் கேள்வி அவர்களது முகங்களில் நிரந்தரமாக முகாமிட்டிருந்தது. ★

### சேதமடைந்த வீடுகள்

அச்சுவேலி, ஜூன் 13

அச்சுவேலி இடைக்காடு பகுதியை இராணுவம் சுற்றி வளைத்து நான்கு தினங்கள் தங்கியிருந்தபோது பல வீடுகள் சேதமாக்கப்பட்டன.

அவற்றில் முற்றாக தகர்க்கப்பட்ட வீடுகளின் விவரம் வருமாறு:

அச்சுவேலி காலாலையைச் சேர்ந்த நட்சத்திரம் பிலோமினு வீடு.

அச்சுவேலி விளங்கிய வத்தையைச் சேர்ந்த சுப்பிரமணியம் குமரகுருபரநாதனின் வீடு.

இந்த இரண்டு வீடுகளும் இராணுவத்தினரால் குண்டு வைத்து முற்றாக தகர்க்கப்பட்டுள்ளன,

டாக்டர் சந்திரபாலா என்பவரின் வைத்தியசாலை, சட்டத்தரணி பாலசிங்கம் என்பவரின் வீடு, பத்தமேனி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் தேவசிகாமணி என்பவரின் வீடு, கந்தையா மகாலிங்கம் என்பவரின் வீடு, இ. கிருஷ்ணன் என்பவரின் வீடு ஆகியவை சேதப்படுத்தப்பட்டன. (அ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பல இன மக்கள் வாழும் சமுதாய அமைப்பில் ஒருமனிதன், ஒருவாக்கு ஏற்பாடுசாத்திய மில்லை

இலங்கையில் வன்செயல்கள் அதிகரித்து வருகின்றன.

இதனால் சிங்களவர்களுக்கும் தமிழருக்கும் இடையேயான உறவுகள் மோசம் அடைந்து வருகின்றன.

அவநம்பிக்கையும் குரோதமும் வளர்ந்துள்ளதைப் பார்த்தால் இரண்டு இனங்களும் வருங்காலத்தில் சமாதானமாக இணைந்து வாழ்வது என்பது முடியாதகாரியம்போல் தெரிகின்றது.

பல இன, மத, மொழி பேசும் மக்கள் வாழும் ஒற்றை ஆட்சி முறையைக்கொண்டுள்ள நாடுகளில் பதற்றமும் சச்சரவும் அடிக்கடி ஏற்படுவது உண்டு.

அது தான் இலங்கையிலும் தெளிவாகத் தெரிகிறது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் சுதந்திரம் பெற்ற குடியேற்ற நாடுகளில் அதிஷ்டம் பெற்ற நாடாக இலங்கை கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் வரை கருதப்பட்டு வந்தது.

> 'த ஆஸ்திரேலியன்' நாளிதழில் சென்ற ஏப்ரல் 23 ஆம் திகதி வெளியான ஆசிரியர் தலையங்கம் இங்கு பிரசுரமாகின்றது.
>
> 'One man - One vote not always answer' என்ற தலைப்பில் இந்த ஆசிரியர் தலையங்கம் அப்பத்திரிகையில் பிரசுரமானது.

பண்டைக்கால, உயர்ந்த நாகரிகங்களைச் சேர்ந்தவர்களே இலங்கையின் குடிமக்கள்.

ஆசியாவிலே உயர்ந்த வாழ்க்கைத் தரமும் கொண்ட கல்வி அறிவும் கொண்டநாடுஇலங்கை.

பிரிட்டனிடம் இருந்து அமைதியான முறையில் இலங்கை சுதந்திரம் பெற்றது.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற நீதி பாரம்பரியங்களையும் திறமை வாய்ந்த அரசசேவையையும் இலங்கை சுவீகரித்துக் கொண்டது.

எப்படியாயினும் பிரிட்டனில் உள்ள ஒற்றையாட்சி முறையை இலங்கையும் ஏற்றுக் கொண்டது.

குறைந்தது கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக பெரிய கருத்து வேறுபாடுகளோ, பிரிவினைக் கொள்கைகளோ இன்றி ஆங்கில, வெல்ஷ், ஸ்கொட் இனத்தவர்கள் நாடாளுமன்றத்தில் பங்கு பெறக்கூடியதாக பிரிட்டிஷ் அரசியல் முறை வழி வகுத்துள்ளது.

## இப்படி ஆலோசனை தருகிறது அவுஸ்திரேலிய நாளிதழ்

ஐரிஷ் இனத்தைப் பொறுத்தளவில் இது அமையவில்லை.

ஆங்கிலேயருக்கும் ஐரிஷ்காரர்களுக்கும் இடையே உள்ள கருத்து வேற்றுமைகளிலும் பார்க்க தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையேயான வேறுபாடுகள் அதிகமாக உள்ளன.

இலங்கையின் இரண்டு பெரிய இனங்களின் கலாசாரங்கள் தனித்தன்மை வாய்ந்தவை. மதங்களும் வேறு. பெரும்பான்மையான தமிழர், இந்துக்கள், சிங்களவர்கள், பௌத்தசமயத்தைச் சேர்ந்தவர்கள்.

வேலையில்லாத் திண்டாட்டம் வட அயர்லாந்து, பெல்ஜியம், பாஸ்க் மாகாணம் ஆகிய இடங்களில் வகுப்புவாதக் கொள்கையைத் தூண்டியது போன்று, இலங்கையின் பொருளாதாரக் கஷ்டங்கள் அங்கு மக்கள் மத்தியில் பிரிவினையை உண்டாக்கியுள்ளன.

பாரம்பரிய தமிழர் பகுதிகளுக்கு மாகாண சுயாட்சியைப் பெரிய அளவில் வழங்க இலங்கை முன்வந்தது. இது காலம் பிந்திய நடவடிக்கை.

இது போதாது என்பது வெளிப்படை.

ஐக்கிய சமஷ்டி அல்லது ஓரளவு சமஷ்டி ஆட்சி அமைப்பு முறையை அமுல் நடத்த இலங்கை முன்வராத பட்சத்தில், நாட்டைப் பூரணமாக ஆளமுடியாத நிலைமைதான் ஏற்படும் என்று தெரிகிறது.

ஆழமான இனரீதியான பிரிவினை உள்ள நாடுகளில் உள்ள பல வீனங்களில் ஒன்று ''ஒருஆள், ஒரு வாக்கு— ஒரு நாடாளுமன்றம்'' என்ற அமைப்பு முறை.

இதற்கான பல உதாரணங்களில் இலங்கையும் ஒன்று. பல இனமக்கள் வாழுகின்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் கவனிக்க வேண்டிய உதாரணமாகவும் இது உள்ளது.

தமிழில் -- திபன்ராஜா

தகவல்: ஜெகநாதன் (அவுஸ்திரேலியா)

★

# சாயிபாபா தூய சேவைக்கு அளித்த அரும் பெரும் பரிசு

ஸ்ரீமதி சீதா மகா இலட்சுமி ஆந்திரா தேசத்தைச் சேர்ந்தவர். இவர் கணவர் சாம்பசிவ ராவ், சென்னை உயர் நீதி மன்றத்தில் நீதிபதியாகக் கடமையாற்றினர். இல் வாழ்வில் இணைந்தபின் மகா சீதா இலட்சுமி சட்டம் பயின்று பரீட்சை எழுதினர். பரீட்சையில் சித்தி எய்தி வக்கில் தொழிலை ஆரம்பித்தார். பேச்சு வன்மையாலும், சட்ட நுணுக்கங்களை தெளிவாகவும் சிராகவும் எடுத்துரைக்கும் ஆற்றலாலும் இவர் பிரபல வக்கீலாக விளங்கினர். அனேக சிக்கலான குற்றவியல், குடியியல் வழக்குகளில் வாதாடி வெற்றியும் சூடினர்.

> கடவுளே! நீ எதற்காக இந்தக் கொடிய துன்பத்தை எனக்கு அளித்தாய்?
>
> நான் அறிந்தநாள் தொடக்கம் எவருக்கும் தீங்கெண்ணுதவள்.
>
> என் காலமெல்லாம் ஏழைக்குழந்தைகளின் நலனுக்கு உண்மையாக உழைத்தேன்.
>
> எனது ஒரே பிள்ளையின் கால்களை ஏன் பறித்தெடுத்தாய்?
>
> —இப்படிக் கதறி அழுதாள் தாய்.

கோட்டு விவகாரங்கள் முக்கிய நேரத்தை ஈர்ந்தாலும், பொதுநலத் தொண்டிற்கு முதன்மை அளித்தார். ''தன்னலமற்றதான தூயசமூக சேவையே தெய்வீகம்'' என்னும் கொள்கையில் அசையாத நம்பிக்கை உள்ளவர். தன் கணவர் பணிபுரிந்த ஊர்களிலெல்லாம் பொதுநலச் சேவா மன்றங்களை அமைத்தார். குறிப்பாக இம்மன்றங்கள் நலிவுற்ற அனாதைச் சிறுர்களின் ஆரோக்கியத்திலும் கல்வியிலும் தீவிர கவனம் செலுத்திவந்தன. மன்றங்களின் தன்னலமற்ற சேவையாலும், மகா சீதா இலட்சுமியின் சிறந்த நிர்வாகத்தாலும் ஏழைச்சிறுர்கள் நல்ல பயன் எய்தினர்.

திறமை, தகுதி, கௌரவம். சமூக அந்தஸ்து எல்லாம் ஒருங்கே அமைந்த இந்த நல்லாளிற்கு பதவிகள் வலியத் தேடிவந்தன. உயர் நீதிபதி நியமனமும் இவருக்குக் கிடைக்க இருந்தது. சமூகசேவை, பதிசேவை ஆகியவற்றிற்குக் குந்தகம் ஏற்படக்கூடும் என்ற ஐயத்தால் இந்தப் பாரிய பொறுப்பை ஏற்க மறுத்துவிட்டார்.

இந்த அம்மையாரின் குடும்பம் மிகவும் சிறியது. மூன்று அங்கத்தவரைக் கொண்டது-கணவன், மனைவி ஒரே ஒரு ஆண்குழந்தை. பதவி, பணம், பண்பு மக்களின் நன்மதிப்புப்பெற்ற இச்

**சமயம்**

சிறு குடும்பத்தின் இல்வாழ்க்கை இன்து நடந்தது. வாழ்க்கைப்படகு சதாசலனமற்றதெளிந்த நீரில் ஊர்வதில்லை. சில சமயம்கடும் மழையையும் பேய்க்காற்றையும் எதிர்க்க நேரிடும். இப்படியானஇடர்ப்பாடொன்று இந்தக் குடும்பத்தால் சந்திக்கவேண்டியிருந்தது.

### பையனின் நோய்

ஒரேஒரு மைந்தன். அவன் பதினொரு வயதில் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டான். கால்கள் இரண்டும் பலமிழந்து கட்டிலில் முடக்கப்பட்டுக் கிடந்தன.

பிரபல வைத்தியர்கள் சிகிச்சை அளித்தனர். ஒரு பலனும் ஏற்படவில்லை. கடைசியில் மருத்துவர்கள் கைவிட்டு விட்டார்கள். அத்துடன் சிறுவன் நடக்கும் சக்தியையும் முற்றுக இழந்து விட்டானென்று அறிவித்தும் விட்டனர்.



குடும்பம் தாங்கமுடியாத கவலையில் ஆழ்ந்தது. மகா சீதா இலட்சுமியோ தெய்வங்களை நாடினர். உடனே டலன் ஏற்படவில்லை.

ஒரு பிற்பகல் மகா சீதா இலட்சுமியுடன் தொழில்புரியும் சக ஊழியர்கள் இருவர் குழந்தையின் சுகத்தை விசாரிக்க வந்தார்கள். விடைபெற்றுச் செல்லும் சமயம் தாய்க்கு ஆறுதல் கூறினர்.

'பையனின் நோயைப் பற்றி மிகவும் கவலைகொள்ளாதே. உங்களுக்கு இருப்பதோ ஒரு குழந்தை. நீங்கள் நல்ல செல்வம் செறிந்தநிலையில் இருக்கின்றீர்கள். ஆகையால் மகனை நன்கு பராமரிக்கலாம்.

மறைந்த அமெரிக்க ஜனதிபதி பிராங்ளின் றூஸ்வல் கூட நடக்க முடியாது, சக்கர நாற்காலியிலேயே அசைந்து திரிந்தார்'' ஆறுதல் அளிக்க வந்தவர்கள் கூறிய வார்த்தை மகா சீதா இலட்சுமிக்குஅதிர்ச்சியை அளித்தது. மகன் அனுபவிக்கும்அவஸ்தை, அவனது இருண்ட எதிர்காலம், அன்புத்தாய் தந்தையரின் உடைந்த உள்ளங்கள் - இவை அனைத்தையும் பணமொன்ருல் ஈடுசெய்து விடலாம் என்று எண்ணுவது எவ்வளவு பேதமை! 'படித்தவர்கள், பண்புள்ளவர்கள்கூட இவ்வாறு முடிவுகளுக்கு வந்து விடுகிறுர்களே!' அன்று மகாசீதா இலட்சுமியானவள் துக்கத்தின் விளிம்பிற்கே சென்று விட்டார்.

'கடவுளே! நீ எதற்காக இந்தக் கொடிய துன்பத்தை எனக்கு அளித்தாய்? நான் அறிந்த நாட்தொடக்கம் எவருக்கும் தீங்கெண்ணுதவள். என் காலமெல்லாம் ஏழைகளின், குறிப்பாக ஆதரவற்ற குழந்தைகளின் மேம்பாட்டிற்கு அல்லவா, எள்ளளவும் தன்னலம் கருதாது உண்மையாக உழைத்தேன். என்னுடைய ஒரேபிள்ளையின் கால்களை ஏன்பறித்தெடுத்தாய்?' என்று கூறித் தேம்பித் தேம்பி அழுதாள். ஆழ்ந்த கவலையில் சோர்வடைந்து தன்மகனைப்பரிதாபமாகப் பார்த்தபடியே இருந்தாள்.

### பெண்தரிசனம்

அப்பொழுது அவள் சற்றும் எதிர்பாராத விதமாய் ஓர் அழகிய மங்கை அவள் அருகில் அமர்ந்து இருப்பதைக் கண்டாள். அந்த மங்கையின் வதனத்தில் அன்றலர்ந்த செந்தாமரை போல் சாந்தியும், குளிர்மையும் தெய்வீகக்களையும் ஒருங்கே சேர்ந்திருந்தன.

மாயமாகத்தோன்றிய

(5 ஆம் பக்கம் பார்க்க)

-- சத்தியா --

# இன்றைய இளம் எழுத்தாளர்கள் நிறைய வாசிக்க வேண்டும்

## இவ்வாறு ஆலோசனை கூறுகிறுர் மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர் பஞ்சாட்சர சர்மா

இன்றைய எழுத்தாளர்கள் ஏதோ ஒரு சில நூல்களை மட்டும் வாசித்துவிட்டு, ஒரு கதையினை எழுதியவுடன் 'நான் பெரும் எழுத்தாளன்' என்று இறுமாப்புக் கொள்ளக் கூடாது.

அவர்கள் எழுத்துத் துறையில் முன்னேற வேண்டுமானுல் ஏராளமாக வாசிப்பது அவசியம். நல்ல நூல்களை வாசித்துத் தமது இலக்கியப் பரப்பை விரிவு படுத்த வேண்டும். அப்போது தமிழறிவு பெருகும். நல்ல நடையும் கைவரும். பத்திரிகைத் துறையினருக்கும் இக்கருத்துப் பொருந்தும்.

மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர் கோப்பாய் பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மா சஞ்சீவிக்கு அளித்த செவ்வியில் இப்படிக் கூறினர். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

கேள்வி:- மறுமலர்ச்சிக்கால உங்கள் அனுபவம் பற்றிக் கூறுங்கள்?

பதில்:- மறுமலர்ச்சிக் கால அனுபவங்கள் பலவகைப்பட்டன. பயனுள்ளவை. தீவிரவாதிகளான சில இளைஞர்களையும் பழைய பண்பாட்டில் ஊறிய சமயவாதிகளான சில பெரியார்களையும் ஒரே சங்கத்தில் சேர்த்து பரஸ்பரம் இருவர் கருத்துக்களையும் ஒருவருக்கொருவர் பரிமாறச் செய்தது ஒரு சாதனையாகும். அக்காலத்தில் மணிக்கொடி சக்தி போன்ற பத்திரிகைகளில் பிறமொழி இலக்கிய அறிமுகங்கள் வெளிவரத் தொடங்கியிருந்தன. எனினும் மேல்நாட்டு இலக்கியங்கள் பற்றிய பல தகவல்களை மறுமலர்ச்சி நண்பர்கள் சிலரிடம், குறிப்பாக அ. ந. கந்தசாமியிடம் அறிந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டது.

கேள்வி:- பழந்தமிழ் இலக்கியங்களில் பரிச்சயம் பெற்றிருந்த நீங்கள் எவ்வாறு மறுமலர்ச்சி எழுத்தாளராக மாற்றமடைந்தீர்கள்?

பதில்:- புதிய துறைகளில், புதிய முறைகளில்



வளர்ந்து கொண்டிருந்த தமிழ் இலக்கியங்களை அடிக்கடி வாசிக்கவும் கலந்துரையாடவும் அம்முறையிலே எழுதிப் பார்க்கவும் ஏற்ற வாய்ப்புக்களை மறுமலர்ச்சியாளர்களின் தொடர்பும், சங்கம் நடத்திய புத்திலக்கிய நூல் நிலையமும் தந்தன. அத்துடன் இலங்கை இந்திய எழுத்தாள அறிஞர்களின் தொடர்பும் ஓரளவு உதவின.

கேள்வி:- 'மறுமலர்ச்சிச் சங்கம்' சாதாரண தமிழ்ச் சங்கங்கள் போன்றதுதானு? அல்லது தனித்தன்மையுடையதா?

பதில்:- இரண்டு தன்மைகளும் அதற்கிருந்தது. தெரிவுகள், தீர்மானங்கள், நிதி சேகரிப்பு போன்றன சாதாரண சங்கங்களைஒத்திருந்தன, சாதாரண தமிழ்ச் சங்கங்களில் தகுதியுள்ளவர்கள்தான்– படித்தவர்கள்தான்- பதவிகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. உறுப்பினராகவும் முடிந்தது. சாதாரண தமிழ்ச் சங்கங்களுக்கு சொந்தமான நூல்நிலையம் ஏதுமிருந்தால் பழந்தமிழ் இலக்கிய, இலக்கண, புராண இதிகாச நூல்களே அங்கு அதிகமாக இருக்கும்.

ஆனுல் மறுமலர்ச்சிச் சங்கத்தில் சாதாரண ஒரு தொழிலாளியும் கூட உறுப்பினராகும் வாய்ப்பும், சாதாரண படிப்பறிவுள்ள எழுத்தாளரும், எழுத்தாளரல்லாதவர்களும் பதவிகளில் அமரும் சந்தர்ப்பங்களும் நிறையவிருந்தன.

மறுமலர்ச்சி சங்கநூல் நிலையத்தில் நவயுகபிரசுராலயம், புதுமைப் பதிப்பகம் போன்ற நிறுவனங்களால் வெளியிடப்பட்ட புதிய நூல்கள் பல இருந்தன. இப்புத்தகங்களில் சில இன்றைய வாசகர்களுக்குக் கிட்டாதனவாய் விட்டன. மறுமலர்ச்சிச் சங்கத்தில் பலர் விருப்புடன் சேர்ந்ததற்கு இந்நூல் நிலையமும் முக்கிய காரணம் எனக் கூறலாம்.

### மறுமலர்ச்சிச் சங்கத்தின் உதயம்

கேள்வி:- மறுமலர்ச்சிச் சங்கம் அமைக்கப் பட்ட வரலாறு பற்றி...?

பதில்:- அளவெட்டி, குரும்பசிட்டி, பொன்னலை, யாழ்ப்பாணம், நாவற்குழி, கோப்பாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 14, 15 இலக்கிய நண்பர்கள் ஒன்று கூடிச் சங்கத்தை ஆரம்பித்தனர். இவர்களில் சிலர் ஈழகேசரி இளைஞர் சங்கத்தில் அங்கத்தவராயிருந்து திரு. சோ. சிவபாதசுந்தரமவர்களின் வழிகாட்டலில் எழுத்துப் பயிற்சி பெற்று நண்பர்களாயினர். இன்னும் சிலர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பண்டிதர் பொ. கிருஷ்ண பிள்ளை முதலிய தமிழறிஞர்களின் இலக்கிய நயப்புரைகளில் ஈடுபட்ட தமிழாசிரியர்கள். சிலர் ஆங்கிலம் கற்று மேற்படிப்பில் ஈடுபட்டவர்கள். எல்லோரும் புதிய இலக்கிய வளர்ச்சியில் ஆர்வமுடையவர்களாக இருந்தனர்.

13-06-1943 இல் கஸ்தூரியார் வீதியில், கனகசெந்திநாதன் தலைமையில் கூடிச் சங்கம் அமைக்கப்பட்டது. 'புதுமைப் பித்தர்கள்' என்ற பெயரே சங்கத்துக்கு சூட்டப்படவிருந்ததாயினும் பின்னர் 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்' என பெயரிடப்பட்டது.

சங்கக் காப்பாளர்களாக திரு. க. சோமசுந்தரப்புலவர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, திரு. சோ. சிவபாதசுந்தரம், திரு. சி. வைத்திலிங்கம், தமிழ்ப்புலவர் திரு. நா. பொன்னையா ஆகியோர் விளங்கினர். தலைவராக திரு. அ. செ. முருகானந்தம், செயலாளராக திரு. தி. ச. வரதராசன் ஆகியோர் தெரிவு செய்யப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

செவ்வி-- வி. பி. சர்மா

# "மாண்ட" விவசாயி 56ஆம் நாள்மீண்ட அதிசயம்; குரும்பசிட்டி இராணுவ முகாம் அனுபவம்

ஐம்பத்துஆறு நாட்களுக்கு முன்னுல் நடைபெற்ற அந்தப் பயங்கரச் சம்பவம்......!

அதைத் தொடர்ந்து எட்டுப் பிள்ளைகளைக் கொண்ட அந்தக்குடும்பத்திற்கு ஏற்பட்ட பேரிடி...

வெள்ளையுடுத்தி விதவையாகிய அந்தக் குடும்பப் பெண்ணின் கண்ணில் இருந்து வழிந்தோடும் வற்ருத கண்ணீருடன் வீட்டின் ஒரு மூலையில் விம்மலும் - விசும்பலுமாக வேதனையின் பளுவினுல் சாயும் தலையின் பாரத்தை நாடியில் கைவைத்து ஏந்தியபடியிருந்தாள் திருமதி தர்மலிங்கம்.

குரும்பசிட்டியில்– இராணுவம் நிலைகொண்டபோது காணுமற்போன நால்வரில் ஆறுமுகம் தர்மலிங்கம் என்ற 55 வயதான விவசாயியும் ஒருவர்.

மயிலிட்டி தெற்குப் பகுதிப் பிரசைகள் குழுவும் காணுமற்போனவர்கள் பற்றிப் பலாலி முகாம் சென்று விசாரித்து - இராணுவப்பகுதியின் கைவிரிப்பால் கவலையுடன் திரும்பியது.

26 - 03 - 1987 ஆம் திகதி குரும்பசிட்டிச் சந்தியில் மினிமுகாம் ஒன்றினை அமைத்தபோதே பொதுமக்கள் மூவரைப் பிணமாக மீட்டதுடன் நால்வர் காணுமற்போயினர். காணுமற்போன நால்வரது விடுகளிலும் மரணச்சடங்குகள் பூதவுடல்களின்றியே நடைபெற்றன.

சடங்குமுறைகளும், சம்பிரதாயங்களும் எட்டாம் நாள் சடங்கு அந்தியேட்டி என்றெல்லாம் நடந்து முடிந்தன.

அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்தினூடாக இறந்தவர்களுக்கென்று வழங்கப்பட்ட ஆயிரம் ரூபாவினை மட்டும் பெற்றுக்கொடுப்பதைத்தவிர பிரசைகள் குழுவால் எதுவுமே முடியாமல் போயிற்று.

மே23ஆம்திகதி... காலை 10 மணியாகி விட்டது.

விதவையாகி, வேதனையால் துடிக்கும் தாயுடன் பிள்ளைகள் எவருமே, ஏதோ, கிடைத்த உணவைக்கூட உண்ணமுடியாதபடி கவ்விப் பிடித்திருக்கும் வேதனையுடன் ஆங்காங்கு இருக்கின்றனர்.

56ஆவது நாள் விடியும் போது கூட...

அந்த [illegible] வத்தினத்தை நினைவு [illegible] சத்தம் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது...

'ஷெல்' குண்டின் அதிர்வு குடும்பத்தலைவன் இழந்த அதிர்வால் மறைக்கப்படுகின்றது.

'ஹெலி, விமானங்களின் உறுமல்கள் இனி என்னதான் செய்துவிடப் போகின்றன' என்ற மனவைராக்கிய [illegible] சாவைச் சாதாரண [illegible]

''மாண்டவரின்'' குரல் காலை 11 மணியளவின்றது.

'பிள்ளை...'

சாதாரணமாக தருமலிங்கம் தனது மனைவியையும் பிள்ளைகளையும் சேர்த்து அழைக்கும் சொல்... அது.

வீட்டிலுள்ள எல்லோரது காதிலும் அது முட்டி மோதுகின்றது.

எல்லோரும் சில நிமிடம் அப்படியே அதிர்ந்து போகின்றனர்.

'படலை'ப் பக்கத்தினை நோக்கியபடி நின்ற திருமதி தர்மலிங்கம் வந்து கொண்டிருப்பவரைப் பார்த்து...! ஒருகணம்... கண்களையே நம்பமுடியாதவராகக் கண்ணைத் துடைத்துக் கொள்கின்றுர்.

நிஜமாகவா?... கனவல்ல நிகழ்வா?

நொடிப்பொழுதுக்குள் மனதில் பல சந்தேகங்கள் தோன்றி மறைவதற்குள்...

'அப்பா...!'

நாலாவது மகள் ஓடிச் சென்று கட்டிப்பிடித்துத் தேம்பித்தேம்பி அழுகின்றுள்.

எட்டுப்பிள்ளைகளது அழுகை ஓசை - தர்மலிங்கத்தின் மரணச்சடங்கு நாளிலும் பார்க்கப் பலமாகப் பரவியது.

''எனக்கு ஒண்டுமில்லை.. சுகமாயிருக்கிறன்-ஏன் அழுகிறியள்... ஆமிதான் பிடிச்சு வைச்சிருந்தவங்கள்''

கமக்கட்டினுள் இருந்த சிப்பாய்கள் கொடுத்த புகையிலைக் கட்டினைக் கையில் எடுத்தபடி எல்லோருடனும் வீட்டினுள் செல்கின்றுர் தர்மலிங்கம்.

'மாண்டவர் மீண்ட' சம்பவம் ஊரெல்லாம் பரவுகின்றது. உறவினர்கள், அயலவர்கள், அறிந்தவர்கள் சகலரும் கூடுகின்றனர்.

சம்பவத்தை அறிந்த நாலும் பிரசைகள்குழுச் செயலாளர் திரு. நடராஜா ஆசிரியருமாக திரு. ஆறுமுகம் தர்மலிங்கத்தின் இப்போதைய வீட்டை நோக்கிச்

(5 ஆம் பக்கம் பார்க்க)

-எஸ். கே. ராஜு-

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சோதனை மேல் சோதனை

சஞ்சீவி சிறுகதை

வசிகரனுக்குக் காய்ச்சல் வந்து பத்து நாட்களாகி விட்டன. உள்ளூர் வைத்தியர் நாடி பிடித்துப் பார்த்துக் கொடுத்த கசாயமும் குளிசையும் நோயைத் தணிக்காததனால், நேற்று வண்டில் கட்டி வன்னேரி மத்திய மருந்தகத்திற்குச்சென்று மருந்து வாங்கி வந்திருந்தார்கள். எனினும் இது வரையில் காய்ச்சல் தணிந்த பாடில்லை.

முந்திய நாள் இரவு முழுவதும் அவன் கண்ணை திறக்கவில்லை; முனகி முனகி, புரண்டு புரண்டுபடுத்திருந்தான். உடம்பில் சூடும் தணியவில்லை. இன்னமும் கத கதவென்று கொதித்த வண்ணமிருந்தது. அந்த அனல் வெக்கையைத் தாங்க முடியாமல் வசிகரனின் பிஞ்சு உடல் சுருண்டு போயிருந்தது. பராசக்திக்கு இரவு முழுவதும் தூக்கமில்லை. மகவின் அருகிலேயேயிருந்து கவனித்துக் கொண்டிருந்தாள்.

''உச்சில் அம்மாளே, உன்னைத்தான் நம்பியிருக்கிறன் பெத்தவயித்தில பாலை ஊத்தம்மா.. வைகாசிப் பொங்கலைச் சிறப்பாகச் செய்யிறன்'' என்று மனதுக்குள்ளாகவே ஆயிரம் தடவைகள் நேர்ந்து கொண்டு வெள்ளைத் துணியில் கால் ரூபாய்க் குற்றி ஒன்றை முடிந்து வசிகரனின் மணிக்கட்டில் முடிந்தாள்.

விடிந்த பின்னும் காய்ச்சல் தணிவதாயில்லை. ஆறுமுகமும் நிலைமையைக் கண்டு கவலை கொண்டவராக, இன்னது செய்வதென்று தோன்றாமல் தவித்தார். இருவருடைய முகங்களும் கவலையில் தோய்ந்திருந்தன.

''என்னங்க,கிளிநொச்சிக்குத்தான் கொண்டு போகணும்... இப்ப என்ன செய்யிறது?'' பராசக்தியின் குரல் கம்மி உடைந்து கரகரத்தது.

ஆறுமுகம் பதிலெதுவும் சொல்லாமலே எழுந்து சென்று காசு வைக்கும் இறங்குப்பெட்டியைத் திறந்தார். பத்து ரூபாவும் சில்லறையும் மாத்திரமே இருந்தது. 'பஸ்ஸுக்குக் கூடக் காணாத' என்று தன் இயலாமையை எண்ணி நொந்தார்.

'மருந்தெல்லாம் ஒழுங்காகக் கொடுத்தியா?' வெளியேவந்த ஆறுமுகம் வேறு வழியின்றிக் கேட்டார்.

'எல்லாம் நேரப்படி தப்பாமல் கொடுத்தனான்... காய்ச்சலென்றால் விடுறதாயில்லை... தேத்தண்ணி கூட வேண்டாமாம்...எழும்பாமல் ஒரே கிடையாய்க் கிடக்கிறான்...'

ஆறுமுகம் மகனது நெற்றியையும் உடலையும் தொட்டுப் பார்த்தார். பராசக்தி சொன்னது போல தீப்பொறி பறக்காத குறையாகத்தான் கொதித்துக்கொண்டிருந்தது. 'முருகா' என்று முனகியவாறே எழுந்தார்.

'கிளிநொச்சிக்குப் போக வசதியில்லை...வன்னேரி ஐயாட்ட இன்னொருக்கால் காட்டிப்பாப்பம்... கைராசிக்கார டொக்டர் என்று எல்லோரும் சொல்லுகினம்...' தனது இயலாமையில் எழுந்த மனக்கவலையை மறைத்துக் கொண்டு மனைவியைத் தேற்றியபடி புறப்பட ஆயத்தமானார்.

'சாப்பிடுங்களேன்...' கரிசனையோடு கேட்டாள் பராசக்தி, 'காலையிலிருந்தே வெறு வயிறு...'

'இங்கே மனுஷனுக்கு இருக்கிற கவலையிலே சாப்பாடு ஒண்ணுதான் குறைச்சல்...' அநாவசியமாக மனைவி மீது எரிந்து விழுந்த ஆறுமுகம், மறுகணமே தன் தவறை உணர்ந்து கொண்டவராக, 'டிஸ்பென்சரிக்குப் போட்டு வந்து சாப்பிடுவம்...' என்று மென்மையாகக் கூறினார்.

ஜெயபுரத்திலிருந்து வன்னேரி நாலு மைல் இருக்கும். காட்டுப் பாதை; இடையில் குளக்கட்டின் மேலாகவும் செல்ல வேண்டும். இவ்வளவு வசதி குறைந்த இடத்தில் அகதியாக வந்து அவஸ்தைப்படுகின்ற அவல நிலையை எண்ணி ஒரு கணம் வேதனையில் துடித்த ஆறுமுகத்தின் மனக் கண்ணில் கடந்து வந்த வாழ்க்கைப்பாதை பளிச்சிட்டது.

2

இட்டத்தட்ட மூன்று தசாப்தங்களுக்கு முன் செட்டிக்குளமும் இப்படியான பின்தங்கிய பிரதேசமாகத்தான் இருந்தது. அப்போது ஐந்தேக்கர் காட்டுக்காணி கிடைத்து, நெடுந்தீவிலிருந்து வந்து செட்டிக்குளத்தில் குடியேறியவர் தான் ஆறுமுகம். அப்போது அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை. துடியாட்டமான வாலிபப் பருவத்தில் அயராது உழைத்து, காடு வெட்டிக் களனியாக்கி, வேளாண்மையால் தலை நிமிர்ந்தார்.

குடியேற்றத் திட்டத்திலிருந்த அயற்காணியில் குடியிருந்த கந்தையா




வின் மகளைக் கண்டு காதல் கொண்டு, கைப் பிடித்து...

பராசக்தி வறுமையிலும் பஞ்சத்திலும் அடிபட்டவள் ஆதலினால் அவருக்கேற்ற மனைவியாக அனைத்திலும் தோள் கொடுத்து அல்லும் பகலும் உழைத்தாள். வறுமையிலும், எளிமையிலும் நகர்ந்த அவர்களது வாழ்க்கைப் படகு, அவர்களது வியர்வைத் துளியின் பசளையால் சிறுகச் சிறுக நகர்ந்து சிறப்புப் பெற்றது.

அவர்கள் முன்னேறியது போலவே செட்டிக்குளப் பிரதேசமும் முன்னேறியது. ஆஸ்பத்திரி, உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பாடசாலை, வாகனப் போக்குவரத்து எல்லாமே வாசல் வரை வந்தது. மூன்று தசாப்தங்களாக்கப்பட்ட கஷ்டங்களின் அறுவடையாகப் புதியதோர் ஊராக இலங்கைப் படத்தில் இடம் பிடித்தது செட்டிக்குளம்; நெல் சாகுபடியிலும், தோட்டப் பயிர்ச்செய்கையிலும் தன்னிறைவு கண்டு, பிற ஊர்களுக்கும் கொண்டு சென்று விற்பனை செய்யவும் முடிந்தது.

வரப்புயர நீருயரும், நீருயரப் பயிருயரும், பயிருயரக் குடியுயரும் என்ற நீதி மொழிக்கொப்ப அங்கிருந்த குடும்பங்கள் எல்லாம் செழிப்புற்றன. குடிசை வீடுகள் கல்வீடுகளாக மாறிவந்தன. குடியிருப்புகளும் பெருகி வந்தன.

ஆறுமுகம் பராசக்தி தம்பதியினருக்கு வசந்தன், வசிகரன் என்று இரண்டு குழந்தைகள்; இருவருமே செழிப்போடு வளர்ந்து வந்தனர். படிப்பிலும் படு சுட்டிகள்! வசந்தனுக்குப் பதினாறு வயதான பொழுது வசிகரன் பத்தாவது வயதில் காலடி எடுத்து வைத்தான். அப்போது தான் அந்த அசம்பாவிதங்கள் நிகழ்ந்தன.

3

ஊரெங்கும் சுற்றி வளைக்கப்பட்டுச்சோதனையிடப்பட்டது. அந்தச் சோதனைகள் அனைவருக்கும் வேதனைகளைத் தந்தன. அதி காலையிலேயே சோதனையிட வந்தவர்கள் வீட்டின் மூலை முடுக்கெல்லாம் எதையோ தேடினர். பொருள்களை எல்லாம் உருட்டிப் பிரட்டி, கிண்டிக் கிளறி, குடைந்து தேடினர்.

ஆறுமுகமும் பராசக்தியும் பிள்ளைகளும் பயத்துடன் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இறுதியில் வசந்தனைக் கூப்பிட்டு 'அடையாள அட்டை' கேட்டனர். 'இன்னும் வரவில்லை...' என்று சொல்லியும் கேட்காமல் அடித்துஉதைத்து இழுத்துச் சென்றனர். 'அம்மா... ஐயோ அம்மா...' என்று வசந்தன் அலறினான். ஆறுமுகத்தால் எதுவுமே செய்யமுடியவில்லை.

அன்று முழுவதும் செட்டிக்குளப் பிரதேசம் எங்கும் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டுக்கொண்டிருந்தன. இடையிடையே குண்டு வெடிக்கும் சத்தங்கள்.

சோதனை முடித்துக் கொண்டு போன பின்னர்தான் ஊரவர்கள் வீட்டுக்கு வெளியே தலை காட்டினர். இடிபாடடைந்து கட்டடங்களுக்கிடையில் பல இளைஞர்களின் சடலங்களைக் கண்ட ஊரவர்கள் 'ஐயோ' என்று அலறிப் புடைத்தனர். சடலங்கள் மீட்கப்பட்டன. வசந்தனின் சடலமும் உருக்குலைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட போது பராசக்தி மூர்ச்சித்தே விட்டாள்.

அடுத்தடுத்த நாட்களில் அப்பிரதேசத்து மக்களும்,வீடுகளும் ஆயுதம் தாங்கியவர்களால் தாக்கப்பட்டபோது பல வீடுகள் எரிந்து சாம்பராகின. குழந்தைகளும் முதியோர்களும் கூடக் கொல்லப்பட்டனர். மிஞ்சியிருந்தோர் காடு மேடு என்று ஓடித்தப்பினர். தமிழனுக்குத் தமிழ் மண்ணிலே ஏற்பட்டு விட்ட இந்தத் துர்ப்பாக்கிய நிலையைக் கண்டு எல்லா உள்ளங்களும் குமுறின. 'இதற்கெல்லாம் ஒரு முடிவேயில்லையா? நீதி, தர்மம் எல்லாம்செத்துவிட்டனவா?' என்று ஏங்கி அழுத உள்ளங்கள் புகலிடம் தேடி அயலூர்களில் தஞ்சம் புகுந்தனர். அன்னம் தண்ணி இல்லாமல் காடு கரம்பைகளில் ஒளித்திருந்துவிட்டு வந்தவர்களை வரவேற்றுச் சமூக சேவை இயக்கங்கள் தஞ்சம் கொடுத்தன.

இதற்கிடையில் செட்டிக்குளத்தில் முப்பது பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி 'லங்காபுவத்' அறிவிப்பதாக வானொலியும், ட. வியும் அலறின. உண்மை நிலை அறிந்த உள்ளங்கள் வெதும்பி அழுதன.

கிளிநொச்சியில் அகதி முகாமில் சில நாட்கள் இருந்து விட்டுத் தென்னிந்திய திருச்சபையினரின் ஆதரவுடன் தும்பிறிவிலுள்ள 'ஜெயபுரம்' என்ற அகதிகள் புனர்வாழ்வுக்குடியேற்றத்திட்டத்தில் வந்து ஆறுமுகம் குடும்பத்தினரும் குடியேறினர். செட்டிக்குளத்தில் அவர்களது வீடு வாசல் இருந்த சுவடே தெரியவில்லை என்று அண்மையில் அங்கிருந்து வந்த ஒருவர் கூறியபோது ஆறுமுகம் செயலற்றுப்போய் விட்டார்.

வந்தாரை வரவேற்

(5 ஆம் பக்கம் பார்க்க)

-- ச. முருகானந்தன் --

# பிணக்குவியல் மத்தியிலும் மனம் சலிக்காது போரிட்டவள்

### வீராங்கனை ஜோன் ஒவ் ஆர்க்

-- அத்தியாயம் மூன்று --

ஆர்க் அளவுகடந்த ஆர்வத்துடன் அரசனைக் காணப் புறப்பட்டாள். அவளை அழைத்துக் கொண்டு ஏழு போர் வீரர்கள் சென்றனர். அரசனைக் காணச் சென்ற ஆர்க்கிற்கு வயது பதினேழாகும்.

சில நாட்களின் பின்னர் சினன் என்னும் பட்டினத்தை ஆர்க் சென்றடைந்தாள். இங்கு தான் இளவரசன் இருந்தான். இந்நகரை வந்தடைந்ததும் உடனடியாக அரசனை அவளால் காணமுடியவில்லை. ஒரு வீட்டில் தங்கியிருந்தாள். பின்னர் ஒருவாறு அரசனைக் கண்டு வணங்கினாள். தான் வந்த செய்தியையும் தான் யுத்தத்தில் பங்கேற்க முடிவு செய்ததையும் அரசனுக்குச் சொன்னாள்.

இளவரசன் அவளைச் சோதிக்க முற்பட்டு 'நீ தேடிவந்த இளவரசன் நானல்லன். அதோ அங்கே நிற்கிறாரே அவர் தான் அரசன் என்று அரசகுமரன் போல் இருந்த இன்னொருவனைச் சுட்டிக் காட்டினான்.

ஆர்க் அதற்குப் பதிலளித்தாள். 'இளவரசே! ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்? நான் நாடிவந்த அரசிளங்குமரன் தாங்கள்தான். இது உண்மை. ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட என்னைப் போர்க்களம் அனுப்புங்கள். நான் போரில் வெற்றி பெற்று ஆங்கிலேயப் படையைத் துவம்சம் செய்வேன்.

இவளின் வேண்டுகோளை எண்ணி அரசன் சிரித்தான்.

அங்கு நின்ற வேறு சிலர் இவளிடம் பல கேள்விகளைக் கேட்டனர். ஆர்க் அவற்றிற்குத் தெளிவான விடையளித்தாள். இவளுக்குப் பைத்தியம் என்று அனைவரும் முடிவு கட்டினர். ஆர்க் மனத்துயருடனும், ஏமாற்றத்துடனும் தான் தங்கியிருந்த வீட்டுக்குத் திரும்பிச் சென்

அந்த நேரம் பிரான்ஸிலுள்ள ஓர்லின்ஸ் நகரை ஆங்கிலேயர் கைப்பற்றியிருந்தனர். அதை எதிர்த்துப் போரிட முடியவில்லையே என்று ஆர்க் எண்ணினாள். தனது வேண்டுகோளை நிராகரித்தமை பற்றி ஆண்டவனிடம் வேண்டினாள். சில நாட்கள் ஓடி மறைந்தன.

மீண்டும் இளவரசனை ஆர்க்கானவள் பார்க்கச் சென்றாள். 'இளவரசே எனக்குப் படை தந்து என்னைப் போரிட

புத்தொளி

அனுப்புங்கள். கடவுள் கிருபை புரிவார். இது உண்மை என எடுத்துரைத்தாள். இதைக் கேட்ட ஒரு போர் வீரன் 'சின்னஞ்சிறுபெண்ணே! நீ முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறாய். கடவுள் வெற்றி தருவார் என்று கூறுகிறாய். ஆனால் உனக்குப் படைத்துணை கேட்கிறாய். அந்தக் கடவுளே அன்னிய படைகளை வெளியேற்றட்டும். ஆங்கிலேயர்கள் அவ்வளவு மட்டமானவர்களல்லர். அவர்கள் சிறந்த போர் வீரர்கள். அவர்களை உன்னைப் போன்ற சிறு பெண்ணால் வெற்றி கொள்ள முடியாது; முடியவே முடியாது' என அடித்துச் சொன்னான்.

கடவுள் நேராக ஒருவர் முன் தோன்றி அருள் செய்வதில்லை. அவர் மனிதன் மூலமாகவே அருள் செய்கின்றார். பெரிய மரத்தைச் சிறு கோடரி வெட்டி வீழ்த்துவதை நாம் கண்முன்னே பார்க்கிறோம். நான் சிறு பெண்ணாக இருக்கலாம். ஆனால் என்னால் எண்ணற்ற ஆங்கிலேயர் அழிவது திண்ணம். எனக்கு விடை தாருங்கள். நான் போருக்குப் போகிறேன்; என்று கூறினாள் ஆர்க்.

அரசன் சிறிது நேரம் ஆலோசித்தான். அவள் பேச்சில் அவனுக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. போர் வீரர்கள் சிலரை ஆர்க்கிற்கு உதவியாக அனுப்பினான். ஆர்க் போர்க்களம் நோக்கி, வீராங்கனை போல் குதிரையில் புறப்பட்டாள். ஆர்க் போர் வீரருடன் சென்றபோது பீர்பா என்னும் சிற்றூர் எதிர்ப்பட்டது. அங்கு அவளுக்கு தெய்வ வாக்கொன்று கேட்டது. 'இவ்வூரில் கதரின் என்னும் புனிதவதியின் பெயரால் ஆன ஆலயமொன்றிருக்கின்றது. அதன் பலிபீடத்தின் முன் ஐந்து சிலுவைக் குறி பொறிக்கப்பட்ட கூர்வாள் ஒன்று இருக்கின்றது. அவ்வாளைப் போருக்கு எடுத்துச் செல்க' இதுவே ஆர்க்கிற்குக் கேட்ட தெய்வ வாக்காக இருந்தது.

ஆர்க் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தாள். தெய்வ வாக்கின்படி அவ்வாளை எடுத்துச் சென்றாள்.

ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட ஓர்லின்ஸ் நகரைச் சென்றடைந்தாள் ஆர்க். போரின் துன்ப துயரங்களை ஆங்கிலேயருக்கு எடுத்துக் காட்டினாள். ஓர்லின்ஸ் நகரைக்கைவிட்டு வெளியேறுமாறு கூறினாள். கெடுகுடி சொற்கேளாது! அவர்கள் ஆர்க்கின் பேச்சைக் கேட்டு எள்ளி நகையாடினர். ஆர்க் அவர்களுடன் நேர் நின்று போர் செய்தாள்.

படைகளை அணிவகுத்துச் 'சென்லூயி' என்னும் கோட்டையை அடைந்தாள். அவள் படையைக் கண்ட ஆங்கிலேயர் அம்பினால் எய்தனர்; குண்டுகளை வீசினர்; கூரிய வேல்களை எறிந்தனர். போர்க்களம் முழுவதும் புகை மண்டலமானது. எங்கும் முக்கலும் முனகலும்; பிணக்குவியல்களுக்கு மத்தியில் நின்று ஆர்க் போரிட்டாள். கடைசி மூச்சுவரை மூர்த்தண்யமாக எதிர்த்தாள். ஆங்கிலேயர் என்றும் காணாத தோல்வியை அன்று கண்டனர். ஆர்க் அன்று வெற்றிக் கொடியேந்தி தன்பாசறையை அடைந்தாள். எட்டு நாட்கள் போரில் அவள் பெற்ற வெற்றி மிகப் பெரிது. ஓர்லின்ஸ் மீண்டும் பிரான்ஸுக்காரருக்கானது. இளவரசன் ஆர்க்கின் திறமை கண்டு ஆனந்தித்தான்.

வெற்றிக் களிப்பால் ஆர்க் பூரித்தாள். இப் பூரிப்பிடையே ஆர்க்கிற்கு இன்னொரு எண்ணமும் தோன்றியது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

# நமது நகைச்சுவை இலக்கியம் உரிய வளர்ச்சி காண வில்லை

சிறுகதை முதலிய இலக்கியப் படைப்புக்களைப் போன்று வாசகர் மத்தியில் நகைச்சுவை இலக்கியத்திற்கும் நல்ல வரவேற்புண்டு.

எழுத்தாளர்களுக்குள் நகைச்சுவையாக எழுதக் கூடியவர்கள் விரல்விட்டு எண்ணத்தக்க மிகச் சிலரே இங்குள்ளனர்.

> தெருவிலே வாழைப் பழத் தோலில் சறுக்கி விழுந்தவரின் அவலத்தைப் பார்த்துச் சிரிப்பதும், சிரிக்கவைப்பதும் நகைச்சுவை ஆகாது. வேண்டுமானால் அதை நையாண்டி வகையில் சேர்த்துக்கொள்ளலாம்.

கலைப்படைப்பு என்றோ, வெறும் பொழுதுபோக்கு இலக்கியம் என்றோ ஒதுக்கிவிடலாகாது. அப்படியும் சிலர் எழுதியிருக்கலாம்—ஆனால் எல்லாமே அப்படியல்ல—இதுதான் உண்மை.

நகைச்சுவை-அதாவது Humour என்பது வேறு. நையாண்டி - அதாவது வைப்பதும் நகைச்சுவையாகாது. வேண்டுமானால் அதை நையாண்டி வகையில் சேர்த்துக் கொள்ளலாம்.

எழுத்தாளர்கள் தங்கள் எழுத்தின் வாயிலாக வாசகர்களை அழவைப்பதும் சிரிக்கவைப்பதும்தான் சிரமமான காரியம்—மிகச் சிறந்த

## நகைச்சுவை எழுத்தாளர்களை விரல் விட்டு எண்ணி விடலாம்

சிலரே இங்குள்ளனர். இத்துறையில் ஈழத்தில் குறிப்பிடத்தக்கவர்கள் சானா என்ற செ. சண்முகநாதன், ரீ. பாக்கியநாயகம், செங்கை ஆழியான், செ. நடராசா, த. இந்திரலிங்கம் ஆகியோராவர்.

'பெரும் பான்மையோரின் விருப்பம்' என்பதை வைத்துக் கொண்டு, நகைச்சுவை இலக்கியத்தை, மட்டரகமான

Comedy என்பது வேறு, 'அங்கதம்' என்றும் Satire என்றும் கூறப்படும் உயர்ந்தவகை நகைச்சுவை பற்றியே இங்கு குறிப்பிடுகிறேன். தெருவிலே வாழைப் பழத்தோலில் சறுக்கி விழுந்தவரின் அவலத்தையோ - சயிக்கிளில் சென்றவர், அதன் ரியூப் வெடித்துப்படும் அவதியையோ பார்த்துச் சிரிப்பதும்-அப்படிச் சிரிக்க

எழுத்தாளர்களாலேயே இவை முடியும். ஆனால் இது 'துன்பியல் சார்ந்த இலக்கியம்' எனத்தெரிந்தால் சதாதுன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் மக்களிற் சிலர், அதை மேலும் அதிகரிக்கச் செய்யும் அத்தகைய படைப்புக்களைப் படிக்க மறுக்கலாம். நகைச்சுவை இலக்கியம் அத்தகையதன்று. உலகிலே சிரிக்க விரும்பாதவர்கள் யார் உளர்? உயிரினங்களில் மானிடர்க்கு மட்டுமே வாய்த்த வரமல்லவா அது? மேலும் துன்பத்தையும் கவலையையும் தற்காலிகமாகவேனும் மறக்கவும் போக்கவும் கூட அஃது உதவுமல்லவா? 'இடுக்கண் வருங்கால் நகுக'

இப்படி உடலியல், உளவியல் அடிப்படையில் இத்தனை முக்கியத்துவம் வாய்ந்த நகைச்சுவை இலக்கியத்தை ஏனைய இலக்கிய வகைகளிலிருந்து குறைத்து மதிப்பிட முடியுமா? அதுவே, சிரிக்க மட்டுமன்றிச் சிந்திக்கவும் வைப்பதாக இருந்தால், அதனால் இரட்டிப்பு நன்மையும் பயனும் உண்டு.

இயல்பாகவே நகைச்சுவை உணர்வும், எதையும் நகைச்சுவை உணர்வுடன் நோக்கும் நுட்பமும் உள்ள ஒருவராலே தான் இத்துறையில் ஒளிவிடமுடியும்—நகைச்சுவைக் கட்டுரையோ, கதையோ எழுதி வெற்றி பெறமுடியும். அத்தகைய எழுத்தாளர்களுக்கு எதை வைத்துக் கொண்டு, எப்படி எழுதுவது என்ற தடுமாற்றம் இராது. எதை வைத்தும் எப்படியாவது நகைச்சுவை இலக்கியம் படைத்துவிடுவார்கள்.

நகைச்சுவைக்கட்டுரைகளையோ கதைகளையோ இப்படித்தான் எழுத வேண்டும் என்று வரையறுத்தோ, அறுதியிட்டோ கூறுவது எளிதல்ல. எழுதஎடுத்துக் கொண்ட ஆக்கத்தின் கரு மட்டும் நகைச்சுவையாக இருந்தால் போதாது. அதைத் தொடக்கி, நகர்த்திக் கொண்டுபோகும் முறையிலும் நடையிலும் கூட நகைச்சுவை இழையோட வேண்டும்.

அந்தக் கற்பனை, போலிப்பு மூலமாகவும் நல்ல நகைச்சுவை இலக்கியங்களைப்படைக்க முடியும். முன்னதற்கு சாவியின் 'வாஷிங்டனில் திருமணத்தையும்', செங்கை ஆழியானின் 'கொத்தியின் காதலையும்', பின்னதற்கு விந்தனின் 'மிஸ்டர் விக்கிரமாதித்தன் கதையையும்' சிறந்த எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம். அன்றுடம் வாழ்வில் இடம் பெறும் நிகழ்ச்சிகளையே நகைச்சுவைக் கண்கொண்டு பார்த்தும்,சிறந்த நகைச்சுவை இலக்கியங்கள் எழுதலாம் என்பதற்குகல்கி, நாடோடி போன்றவர்களின் கட்டுரைகளையும் செங்கை ஆழியானின் 'ஆச்சி பயணம் போகிறாள்'— 'முற்றத்து ஒற்றைப்பனை' நாவல்களையும் சான்றுகக் கொள்ளலாம்.

நகைச்சுவை இலக்கியம், ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிலே,வளர

(5 ஆம் பக்கம் பார்க்க)

-- பொ. சண்முகநாதன் --

## வாசகர் சதுக்கம்

# தமிழில் எண் சோதிடம் பார்க்கக் கூடாதா?

மூடநம்பிக்கைகள் இல்லாத நாடே கிடையாது. ஆனால் பின் தங்கிய நாடுகளில் இது கூடுதலாக வேரூன்றி உள்ளது. அண்மையில் சில வருடங்களாக எண்சாஸ்திரத்தில் அனேகமான எம் மக்கள் அளவு கடந்த நம்பிக்கை வைத்துள்ளார்கள். உதாரணமாக CENTRE என்ற சொல்லை எண் சாஸ்திரத்தின்பெயரால் CENTAR என்று பாவிக்கிறார்கள். இந்தச் சொல்லை ஓர் ஆங்கிலேயன் பார்ப்பவராக இருந்தால், என்ன கருத்துக் கொடுப்பானோ இங்கிலேனுக்குத் தான் தெரியும்.

இது ஒரு புறமிருக்க ஆங்கிலச் சொற்களுக்கே எண் சாஸ்திரம் பார்க்கிறார்கள்.எம்மொழி தமிழ் மொழி. ஏன் தமிழ் எழுத்துக்களுக்கு எண் சாஸ்திரம் பார்ப்பதில்லை? ஒரு பதத்திற்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் எண் சாஸ்திரம் பார்த்தால் பொருத்தமிருக்குமா?

சாஸ்திரத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்றவர் கெய்ரோ (CHEIRO). இவரின் ஆராய்ச்சியின்படி ஆங்கிலச் சொற்களுக்குரிய எண்கள் பின் வருமாறு:

| | | |
|---|---|---|
| ஏ | : | 1 |
| பி | : | 2 |
| சி | : | 3 |
| டி | : | 4 |
| இ | : | 5 |
| எவ் | : | 8 |
| ஜி | : | 3 |
| எச் | : | 5 |
| ஐOR ஜே | : | 1 |
| கே | : | 2 |
| எல் | : | 3 |
| எம் | : | 4 |
| என் | : | 5 |
| ஓ | : | 7 |
| பி | : | 8 |
| கியூ | : | 1 |
| ஆர் | : | 2 |
| எஸ் | : | 3 |
| ரி | : | 4 |
| யு | : | 6 |
| வி | : | 6 |
| டபிள்யூ | : | 6 |
| எக்ஸ் | : | 5 |
| வை | : | 1 |
| இசற் | : | 7 |

ஆனால் இந்தமுறையை எத்தனை சோதிடர்கள் கடைப்பிடிக்கின்றார்கள் என்பது அவர்களுக்கும் எண் சாஸ்திரம் பார்ப்பவர்களுக்கும் மட்டுமே தெரியும். எமது சமுதாயம் முன்னேறுவதாயின் அர்த்தமற்ற மூடநம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

ந. தேவராஜன்
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய விரோதச் செயற்பாட்டுக்கு இலங்கையில் தூபமிடும் சக்திகள் எவை?

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் பீட்டர் கெனமன் கொழும்பில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.

ஹபரணை கொலைகளுக்கும் பெட்டா குண்டுவெடிப்புக்கும் பின்னர் பல இலங்கை ஆட்சித் தலைவர்களும், எதிரணித் தலைவர்கள் பலரும் இந்திய விரோத சிந்தனைச் செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் போக்குக்கான உந்துதலைகுண்டுவெடிப்பு நிகழ்ந்த சிலமணிநேரத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியதொடர்பு சாதனமான வால்ஸ்ரீட் ஜேர்னல் கொடுத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**அமெரிக்கா காட்டிய சைகை**

இதனைத் தொடர்ந்து எமது பிராந்திய அலுவல்களுக்குப் பொறுப்பாயுள்ள அமெரிக்கஅரசு அதிகாரி றொபேட் சி. பெக் விடுத்த அறிக்கையானது ஆத்திரம் ஊட்டுவதாக இருந்தது.

இந்தியா நடவடிக்கை எடுப்பினும்கூட யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும்படி அவர் ஜெயவர்த்தன அரசினைத் தூண்டினார்.

அமெரிக்காவின் சைகையை ஏற்று இலங்கையில் உள்ள இந்திய விரோதச் சக்திகள் செயலில் ஈடுபடத்தொடங்கின. பிரதமர் பிரேமதாசா தான் முதல் 'சீட்டை' எறிந்தார்.



ஜே. ஆர்.

பிரேமதாசா நாடாளுமன்றத்தில்ஆற்றியஉரையில் இந்தியாவை எதிரியாக வர்ணித்ததும் அல்லாமல் பயங்கரவாதத்துக்கும் அதன் இந்திய ஆதரவாளர்களுக்கும் எதிராக மேலைநாட்டு வல்லரசுகளில் இருந்து உதவி பெறவும் வேண்டும் என்றார்.

**ஜே. ஆர்**

ஜனாதிபதி ஜயவர்த்தனவும் வெளிநாட்டு நிருபர்கள் மத்தியில் ஆற்றிய உரையில் ராஜீவைத் தனிப்பட்டமுறையில் சாடுவதைத் தவிர்த்து இந்திய விரோதப் போக்கைக் கடைப்பிடித்தார்.

இந்தியா ஹிட்லர் பாணியில் செயற்படுவதாகக்கூறி தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத்தை தமிழ்நாடு முதலமைச்சரின் தனிப்பட்ட அரசியல் இராணுவம் எனவும் வர்ணித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் சமுகமளித்த அமெரிக்க,பிரித்தானிய மேற்கு ஜேர்மனி நிருபர்களிடம் எதற்காக அவர்கள் நாட்டு அரசாங்கங்கள் தனது முயற்சிகளுக்கு உதவி வழங்க மறுக்கின்றன என்றும் கேட்டார்.

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்றக்குழு இந்தியாவுக்கு ஆத்திரம் ஊட்டும் பிரேரணையை நிறைவேற்றியதைத் தொடர்ந்து யு. என். பி நாடாளுமன்ற உறுப்பினர்களும் உதவி அமைச்சர்களும் வெளிவிவகார அலுவல்கள் ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் அமெரிக்க-இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் உருவாகவேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.



பீற்றர் கெனமன்

ஐ. நா. சபையின் முன்னர் இந்தியாவைக்குற்றவாளியாக நிறுத்த வேண்டும் என்றனர்.

இது மிகவும் ஆபத்தான போக்கு, இலங்கையை மேலும் மேலும் அமெரிக்கா மற்றும் மேற்குநாட்டு சக்திகளில் தஞ்சம் புக வைக்கும்.

**சிறிமா**

ஆனால் இந்தக் காலகட்டத்தில் சிறிமாவோவின் நிலைப்பாட்டில் மாற்றம் காணப்படுவது வரவேற்கத்தக்கது.

சிறிமாவோ யுகோஸ்லாவியாவுக்குச் செல்ல முன்னர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இந்தியாவுடன் நல்லுறவை வளர்க்கவேண்டும் என்று கூறினார்.

மொஸாட் படையினரை இங்கு வரவேற்றமை, வொய்ஸ் ஒவ் அமெரிக்க ஒலிபரப்புக்கு அனுமதி வழங்கியமை, பாகிஸ்தானில் இருந்து இலங்கை இராணுவம் பயிற்சி பெறுதல் ஆகியவை சாரணமாக இலங்கை அரசு அணிசேராக் கொள்கையில் இருந்து விலகிச் செல்வது கண்டு இந்திய அரசு சிற்றம் அடைந்துள்ளது என்றும் சிறிமா பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியுள்ளார். ஆனால் இக்கூற்று சுதந்திரக் கட்சியைச் சார்ந்த எதிர்க்கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயக்காவின் நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாறானது.



ராஜீவ்

பஞ்சாப் போன்ற ஏனைய இந்தியப் பகுதிகளில் நடைபெறும் நிகழ்வுகள், அவுஸ்திரேலிய பாணியில் ஜனநாயக ரீதியாக தெரிவான அரசாங்கத்தினை பதவியில் இருந்து நீக்குமாறு இந்தியா ஜனாதிபதியைத் தூண்டுதல், பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை உதவுதல் ஆகியவை இந்திய அரசினை நலிவடையச் செய்யும் அமெரிக்க ஏகாதிபத்திய முயற்சியாகும்.

எமது பிராந்தியத்தில் உள்ள பாரிய அரசான இந்தியாவுடன் விரோத உணர்வை வளர்ப்பது இலங்கைக்கு நல்லதல்ல.

தமிழில்: வி. வி

## இனி நீ வரமாட்டாய்?

படகுகள் திரும்பிவிட்டன
இன்னும் நீ வரவில்லை
காலையில் சுறியுடன்
சந்தைக்கு வரும் நீ
இன்னும் வரவில்லை
கறிக்கடையின் மேல்
காகங்கள் இல்லை
பருந்தும் இல்லை
கழுகும் இல்லை
கழுகு விமானங்கள்
வட்டமிடுகின்றன
இன்று நல்ல......வேட்டைதான்
ஏனோ நீ இன்னும் வரவில்லை
எல்லோரையும் கேட்டேன்
மௌனமாகி விட்டார்கள்
காத்திருக்கிறேன்
வானொலிச் செய்தி
மௌனத்தைக் கலைக்கிறது
''கடற்பிராந்தியத்தில்
ஒரு பயங்கரவாதி
கொல்லப்பட்டார்''
கண்ணீர் உப்பாகியது
இப்போது புரிகிறது
இனி நீ வரமாட்டாய்!

—கீதப்பிரியன்

## மாண்ட விவசாயி----

(3ம் பக்கத் தொடர்ச்சி) சென்றோம்.

**ஐம்பத்தாறு நாள் அனுபவம்**

தனது 56 நாள் அனுபவத்தை திரு. தர்மலிங்கம் விவரிக்கின்றார்.

'தோட்டத்திற்குப் போகுமுன்பே குரும்பசிட்டிப் பிள்ளையார் கோவிலுக்குக் கும்பிடச் செல்லும் நான் அன்றும் செல்கின்றேன்.

அதிகாலை 5மணியிருக்கும் 'ஷெல்' சத்தங்கள் குரும்பசிட்டியை மூழ்கின்றது.

பயத்தில் வெளியேற முடியாதவாறு கோவிலுக்குள்ளேயே நான் நிற்கின்றேன்.

எதிரும் - புதிருமாக துப்பாக்கிச் சத்தங்கள் படபடக்கின்றன. நிலக்கண்ணி வெடிச்சத்தமும் அதிர்கின்றது.

நேரம் 8 மணியாகியிருக்கும்.

இராணுவம் நான் நின்ற பக்கத்தை நோக்கி வருகின்றது.

எதுவும் செய்ய முடியாதபடி கோயிலுக்குள்ளிருந்து தலையின் மேல் கையைக் கும்பிட்டபடி வெளியே வருகின்றேன்.

எனக்கு நேரே துப்பாக்கியை நீட்டியபடி வந்த சிப்பாய் என்னைச் சோதிக்கின்றார்.

தம்முடன் நிற்குமாறும் எங்கேயும் போக முனையக்கூடாதெனவும் கடுமையான உத்தரவு எனக்கு வழங்கப்படுகின்றது.

குரும்பசிட்டி பொன்-பரமானந்த மகாவித்தியாலயத்தினுள் கண்ணிவெடியில் சிக்கிய ஐந்து இராணுவ சடலங்களுடன் நானும் இருத்தப்பட்டேன்.

என்னைச் சுடப்போவதாக ஏதோ சிங்களத்தில் கத்தியபடி வந்த சிப்பாயை வேறொரு சிப்பாய் தடுத்து நிறுத்தினான். அன்று நண்பகல் 1மணிக்கு இறந்த இராணுவத்தினரின் உடல்கள் இராணுவத்தால் எடுத்துச் செல்லப்பட்டன.

நான் தடுத்து வைக்கப்பட்டேன். அன்றைய மோதல் பிற்பகலளவில் ஓய்ந்தாலும் வெடிச்சத்தங்கள் ஓயவில்லை.

குரும்பசிட்டித் தாக்குதலுக்குப்பொறுப்பான விமலரட்ண என்னை அழைத்துச் சென்று விசாரித்தார்.

பிள்ளையார் கோவிலுக்குள்ளேயே என்னை இருக்குமாறு பணித்தனர்.

அன்றிரவு அப்பகுதி வீடு ஒன்றில் இருந்த ஆடு ஒன்று கோவிலுக்குள்ளேயே கறியாகியது.

குரும்பசிட்டி — பரமானந்த மகாவித்தியாலயம், அதன் அருகிலுள்ள பிள்ளையார் கோயில், அம்மன் கோயில் என்பவை இராணுவம் தங்கி நிற்கும் முகாம்களாயின.

சிப்பாய்கள் என்னை ஒரு வேடிக்கைப் பொருளாகவே வைத்திருந்து பார்த்தனர்.

திசமறகமாவைச் சேர்ந்த சிப்பாய் சில்வா சிங்களத்தில் சொல்லித் தரும் சொல்லை நான் பாடமாக்கிச் சொல்லப் பணிக்கப்பட்டேன்.

''சிறிய எமது இலங்கையைப் பிரிக்காது மூன்றினத்தவராகிய நாம் ஒன்றாக வாழ்வோம்'' என்பதே அவ்வாசகத்தின் கருத்து.

நான் சொல்லும் கொச்சைச் சிங்களத்தைக்கேட்டு அவர்கள் சிரிப்பார்கள்.

வருபவர்கள் எல்லோரும் அதைக் கேட்டுச் சிரிப்பர்.

என்னை விடுவிக்கும் போது புலிகளிடமும், மற்ற மக்களிடமும் அதைக் கூறும்படி கூறிய திசமறமையைச் சேர்ந்த சிப்பாய் - கதிர்காமம் போகும்போது தனது வீட்டுக்கு வருமாறு கூறி வழியனுப்பினர்.

கோயிலுக்கு என்னைப் பூசை செய்யும்படி கூறிய சிப்பாய்கள் நான் பூசை செய்யும்போது தமது மாமிச உணவை வைத்துப் படைப்பதாகக் கூறிக் கேலி செய்வர்.

சிகரட்டைப் பற்றும் படி தந்து பின் - அதில் எனக்கு விருப்பமில்லாததால் புகையிலை வழங்கினர்.

தனிக்கோப்பை ஒன்றில் நாளாந்தம் உணவு வழங்கி பாதுகாப்பு அரண் அமைக்கும் தமக்கு உதவச் செய்தனர்.

வருடப் பிறப்பன்று புதிய வேட்டி, சாறம் என்பவற்றைத் தந்ததுடன், 'பெல்ஸ்' எனப்படும் காற்சட்டையையும் தந்து அதனைப் போடும்படி வற்புறுத்தி என்னைப் பார்த்துச் சிரிப்பர்.

பாடசாலைக்குப் பக்கத்தில் ஆறுமுகம் வாமதேவன், கதிரேசு சிவதாசன் (ஆசிரியர்), அருணசலம் சக்திவேல், சதாசிவம் சிவராமலிங்கம், சிவசாமி குஞ்சிதபாதக் குருக்கள், வ. பாலச்சந்திரஐயர் என்பவரது உடைத்த வீடுகளும்,

உதயதாரகை மன்றத்துக்கு அண்மையில் இருந்த நா. சினித்தம்பி, துரைச்சாமி சிவனேசன், வைத்திலிங்கம் கந்தையா, திரு. அமிர்தலிங்கம், கந்தையா சத்தியமூர்த்தி, பொன்னுத்துரை சிவசுப்பிரமணியம் என்பவர்களது வீடுகளுக்கு என்னையும் அழைத்துச் சென்று காட்டியே முற்றாகக் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு வெளியாக்கப்பட்டன.

ஆசிரியர் அரியரத்தினத்தின் வீடும், டாக்டர் கணேஸ் ஐயாவின் வீடும் இராணுவ லெப்டினன்களின் அலுவலகமாகப் பாவிக்கப்படுகின்றன.

பெரிய 'பிளாற்' உள்ள திரு. வன்னியசிங்கத்தின் வீடுகள் இரண்டு இராணுவ வாகனங்கள் விடும் இடமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

குரும்பசிட்டியில் இருக்கும் தென்னை தொடக்கம் சகல மரங்களும் அவற்றின் பயன்பாடுகளையும்இராணுவத்தினரே பயன்படுத்துகின்றனர்.

சிங்களத்தில் 'தேசிய ஒற்றுமை' பற்றிய வசனத்தைப் பாடமாக்கிக் கூறியதன் பின்பே தாம் விடுதலை செய்யப்பட்டதாகக் கூறிய திரு. தர்மலிங்கம் தாம் வீடு திரும்பும்போது போராளிகள் தம்மை விசாரித்து வீடு அனுப்பியதாகக் கூறியதுடன்-

'பல சடலங்களைக் கண்ட நானும் சடலமாவேன் என்று ஆரம்பத்தில் பயந்தேன். உண்மையில் மறுவாழ்வு தான் பெற்றிருக்கின்றேன்— என்னைக் குரும்பசிட்டி விநாயகரே காப்பாற்றினார்' என்று கூறி அவரும் அவரது குடும்பத்தினரும் மகிழ்ச்சிக் கண்ணீருடன் எம்மை வழியனுப்பி வைத்தனர். ★

## இன்றைய---

(3ஆம் பக்க தொடர்ச்சி) பட்டனர்.

கேள்வி:- மறுமலர்ச்சிச் சங்கம் உதயமாகிய நோக்கம் என்னவாயிருந்தது?

பதில்:- தமிழ் இலக்கியத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே பிரதான நோக்கமாக இருந்தது.

**ஈழகேசரியின் பங்களிப்பு**

கேள்வி:- சங்கத்தின் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில் ஈழகேசரி போன்ற பத்திரிகைகளின் பங்களிப்பு எவ்வாறு இருந்தது?

பதில்:- அன்றைய தினசரிகள் யாவுமே எங்கள் செய்திகளையும் அறிக்கைகளையும் வெளியிட்டன. எனினும் ஈழகேசரியின் ஆதரவு சிறப்பானது.

ஈழகேசரி பத்திராதிபர் திரு. நா. பொன்னையா எழுத்தாளருடைய சுதந்திரத்தை மதித்தவர். அவர்களுக்குரிய இடம், கௌரவம் அளித்தவர். உரிமை வழங்கியவர்.

கேள்வி:- 'மறுமலர்ச்சிக்காலம்' என இக்காலம் அழைக்கப்பட்டமைக்கான காரணம் என்ன?

பதில்:- புதியமுறையில் பல படைப்புக்கள் வெளியிடப்பட்டமை; குறுகிய காலத்தில் சங்கம் சாதித்த சாதனைகள் அளப்பரியனவாக இருந்ததை காரணமாக மறுமலர்ச்சிக்காலம் என்றொரு வழக்காறு ஏற்பட்டது. 1980 ஆம் ஆண்டில் திரு. சொக்கன் 'மறுமலர்ச்சிக் காலமும் கருத்தும்' என்று ஓர் ஆய்வுரையை வெளியிட்டிருந்தார். ★

## சாயிபாபா---

(3 ஆம்பக்கதொடர்ச்சி) கன்னியின் சௌந்தர்யத்தில் சொக்கித் தன்னையே மறந்த நிலையிலிருந்தாள் மகா சீதா இலட்சுமி. வந்தவரின் விவரத்தையோ, அல்லது அந்தப் பேரழகி எதற்காக இப்படித் திடீர்ப் பிரவேசம் செய்தாள் என்ற கேள்விகள் அவள் மனதில் எழவேயில்லை.

வந்த திருமகளோ அருள்பொழியும் பார்வையுடன், 'மகா சீதா இலட்சுமி, வருத்தமும் சஞ்சலமும் வேண்டா. சாயுபாபாவைப் பிரார்த்தனை செய், உன் மகனின் நோய் குணமடையும்.' என்று நல் வார்த்தை கூறினாள்.

அதற்கு மகா சீதா இலட்சுமி ''நான் தெய்வங்களிடம் அனேக பிரார்த்தனைகளும், வேண்டுதலும் செய்துள்ளேன். மேலும் மன்றாட்டங்கள் செய்ய நான் தயாராக இல்லை.''

முன்பின் அறியாத பேரழகியோ விடுவதாக இல்லை.

''நான் சொல்வது உண்மையெனக் கருது. என்மேல் நம்பிக்கைவை. உன் பிரார்த்தனைகளை சாயிபாபாவிற்குச் செலுத்து'' என்று கூறி மாயமாக மறைந்தாள்.

இந்த நிகழ்ச்சி தாயையும் மகனையும் திகைக்க வைத்தது. இப்படியான நிகரற்ற பேரழகியை அவர்கள் அந்த வட்டாரத்தில் - அல்ல எங்கணுமே பார்த்ததில்லை.

அந்த யுவதி சடுதியாக மறைந்ததற்கும் காரணங்கள் அவர்களால் அறியமுடியவில்லை. நடந்த சம்பவம் அவர்களுக்கு ஆச்சரியமாகவும் அதிசயமாகவும் தோன்றிற்று.

அன்று நித்திரைக்குப் போகுமுன் அவர்கள் இருவரும், சாயி பாபாவைப்பற்றி ஒன்றுமே அறியாதவர்கள், பாபாவை மெய்மறந்து வழிபட்டு: தங்கள் பிரச்சினைகளை மனம் விட்டு எடுத்துரைத்து, பாபாவின்மேலே பாரத்தைப் போட்டுவிட்டு நிம்மதியாகத் தூங்கச் சென்றனர். அவர்களுக்கு அன்று தரிசனம் அளித்த தெய்வத்திரு உருவம் அவர்கள் மனத்தை விட்டு அகலவில்லை.

நடுநிசி. நல்ல உறக்கத்தில் அமிழ்ந்திருந்த மகா சீதா இலட்சுமி ஏதோ அரவம் கேட்டு எழுந்தாள். (வளரும்)

## நமது...

(4ஆம் பக்க தொடர்ச்சி) வேண்டிய ஒரு கலையாக வேயுள்ளது. எழுத்தாளர்கள் தனியே சிறுகதைகளும், நாவல்களும், கவிதைகளும் எழுதுவதுடன் நிற்காமல் இத்துறையிலும் கவனம் செலுத்தி உழைக்க முன்வர வேண்டும். அதே வேளையில், நகைச்சுவை எழுத்துக்களுக்கு இருக்கின்ற வரவேற்பையும், மதிப்பையும் சிலர் தமக்குச்சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, 'இது நகைச்சுவை— இங்கே சிரியுங்கள்' என்று சொல்லும் படியாக எதையாவது எழுதித் தள்ளிவிடுகிறார்கள் தலைப்பை நகைச்சுவை தொனிக்கும்படியாகக் கொடுத்துவிட்டு, அதற்கேற்றாற் போல ஒருபடத்தையும்போட்டு விட்டால் மட்டும் கட்டுரை, நகைச்சுவைக்கட்டுரையாகி விடாது. இதெல்லாம் நகைச்சுவை இலக்கிய வளர்ச்சிக்கு எந்த வகையிலும் உதவி செய்வதாகாது. ★

## பேனாவால் கடன் அடைத்தார்

எல்லோரும் பேனா பிடித்ததும் பேனா மன்னராகி விடுகின்றார்கள். பேனா பிடித்தவர் பலர் கடன்பட்டு அடைவு வைத்து அவலப்படுவதுமுண்டு. ஆங்கிலவுலகில் ஜோர்ஜ் பேனாட் ஷா எழுதிய ஒவ்வொரு சொல்லுக்கும் பெறுமதியிருந்தது.

சேர் வால்ரர்ஸ் கொட் எனும் பழைய புலவர் தாம் பட்ட கடனைத் தீர்ப்பதற்கு வழி இது தான் என்று பேனாவைத் தூக்கினார், வேவளி நவீனங்கள் என்ற தலைப்பில் எழுதினார். கடனும் தொலைந்தது. அவர் எழுதியவை உலகப்புகழ் பெற்றன.

நன்றி: மில்க்வைற் செய்தி

## பிணக்குவி...

(4ஆம் பக்க தொடர்ச்சி) அவள் உடனே கார்லசு மன்னனிடம் சென்று வணங்கினாள்.

'அரசே, ஆங்கிலேயரிடமிருந்து மீட்கப்பட்ட ஓர்லின்ஸ் நகரில் தங்களுக்கு முடிசூட்ட நான் பெரிதும் விரும்புகின்றேன். அதற்காக ரீம்சு நகருக்குத் தாங்கள் எழுந்தருள வேண்டும்' என அரசனை வேண்டினாள்.

அரசனுக்கோ முடி சூட்டிக் கொள்ள எண்ணம் தான். ஆனால் ரீம்சுக்குச் சென்றால் பெரும் துன்பம் ஏற்படும் என்று அவன் எண்ணினான். ஆதலினால் ஆர்க்கின் கருத்தை அவன் நிராகரித்தான்.

பிறிதொரு நாள் அவள் அரசனிடம் சென்று 'ரீம்சு நகரில் தங்களுக்கு முடி சூட்டத் தெய்வக் கட்டளை பிறந்துள்ளது. வாருங்கள் ரீம்சுக்கு என்று வற்புறுத்தினாள்'

(வளரும்)

## சோதனை மேல் .....

(4ஆம் பக்க தொடர்ச்சி) கும் வன்னேரியை தஞ்சம் என எண்ணி மீண்டும் புதுவாழ்வை ஆரம்பித்தார் ஆறுமுகம். அவரைப் போன்றவர்களின் கடும் உழைப்பால் வன்னேரிப்பிரதேசத்திலுள்ள தும்பிறிவில் பொன்னேரியாகி வந்தது. ஜெயபுரம் என்று பெயர் சூட்டப்பட்ட அக்குடியேற்றத் திட்டவாசிகள் ஒரு வருட முயற்சியால் படிப்படியாக முன்னேறி வந்தார்கள்.

ஆறுமுகம் நல்ல பிரயாசி, பராசக்தியும் சாடிக்கேற்ற மூடி. எனவே அவர்களது நிலம் விரைவிலேயே பண்படுத்தப்பட்டுக் குடிசையும் அமைக்கப்பட்டது. சிக்கிரத்திலேயே கிணறும் வெட்டிவிட்டனர்.

உழைப்பில் உரமேறிய ஆறுமுகம் சும்மா இருக்கவில்லை. மண்ணிலே பொன் விளைய வியர்வை மணிகளை அர்ப்பணம் செய்தார். முன்னேற வேண்டும் என்ற துடிப்பில் கடன்பட்டு விவசாயம் செய்தார். பச்சைப் பசேலென்றிருந்த வயற்காடு அவரது வரண்டு போயிருந்த நெஞ்சத்தில் பசுமையான கனவுகளைத் தோற்றுவித்தன. நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக செழித்து வளர்ந்த பயிரெல்லாம் பக்குவமாக அறுவடைக்குத் தயாராக இருந்தபோது தான் அந்த அசம்பாவிதம் நிகழ்ந்தது.

கண்ணிவெடியில் சிக்கிய கவசவாகனம் ஒன்று சுக்கு நூறாகியதைத் தொடர்ந்து, அன்று மாலையில் சிவிலுடையில் வந்தவர்கள் அப்பிரதேசத்து வயல்களுக்குத் தீ வைத்தனர். அறுவடையிலீடுபட்டுக் கொண்டிருந்த விவசாயிகள் சிலர் ஈவிரக்கமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டு எரியும் வைக்கோற் போர்களில் வீசப்பட்டனர். இந்த அனர்த்தங்களில் ஆறுமுகத்தின் வயல்களும் சாம்பராகின. 'உங்களுயிர் தப்பியதே போதும்' என்று ஆறுமுகத்திற்கு பராசக்தி ஆறுதல் கூறித் தேற்றினாள்.

இந்த நிலையில் உள்ளதை விற்றுச்சுட்டுத்தான் வயிறு கழுவ முடிந்தது. அயலவர் அனைவருக்குமே கஷ்டம் என்கிறபோது யாரிடம் கடன் கேட்பது? வறுமையின் கோரத்தாண்டவம் ஒரு பக்கம். உச்சிமீது வானிடிந்து அச்சமூட்டும் அரக்கத்தனம் இன்னொரு புறம்; இந்த நிலையில் மகனுக்குக் காய்ச்சல்...

மறுபடியும் வன்னேரி டிஸ்பென்சரிக்குக் கொண்டு சென்றபோது டாக்டர் 'நெருப்புக் காய்ச்சல்' என்று கூறி, அவசரமாகக்கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு போகும்படி பணித்தார். இவர்களது நிலைமையை உணர்ந்த டாக்டரே பணம் கொடுத்து அனுப்பி வைத்தார்.

நீண்டநேரம் தவம் கிடந்து பஸ் எடுத்துப் புறப்பட்டனர். வசீகரன் சுயநினைவு இழந்திருந்தான். எவ்வளவு விரைவாகப் போகமுடியுமோ அவ்வளவு விரைவாகப் போகும்படி டாக்டர் கூறியிருந்தபடியால் ஆறுமுகமும் பராசக்தியும் தாமதம் ஆக ஆகப் பயத்தினால் பதற்ற[illegible]த்தனர். 'கட கட' என்று மூச்சு [illegible] கொண்டிருந்தது. இப்படியான 'இறவல்' பஸ்ஸை பள்ளமும் குழியுமான இந்த றோட்டிலே ஓடுவதே சிரமம். சாரதி உண்மையிலேயே கெட்டிக்காரன் தான். நோயாளியின் அவசரம் அறிந்து தன்னாலியன்ற வரை விரைவாகச் செலுத்தினான்.

பஸ் முறிகண்டியை அடைந்ததும் மறுபடியும் சோதனை ஆரம்பமானது. ஒன்றன் பின் ஒன்றாகப் பல கவச வாகனங்களிலும் ஜீப்களிலும், பீரங்கி பூட்டிய கனரக வாகனங்களிலும்,டிரக்குகளிலும் ஆயுதம் தாங்கியோர் வடக்கு நோக்கி அணிவகுத்துச் சென்றனர்.

பிரயாணிகளின் முகங்கள் மரணபயத்தில் வெளிறிக் கிடந்தன. [illegible] கின்ற இந்த நாட்டில் [illegible] அரசாங்கங்கள் என்று ஆறுமுகம் புழுங்கினான். பஸ், வழிவிட்டு ஒரு ஓரமாகத் தரித்து நின்றது. கவச வாகனங்கள் போன பின்னர் தான் நகரமுடியும்.

வசீகரனின் உடல் அனலாகக் கொதித்துக் கொண்டிருந்தது. பராசக்தி வேண்டாத தெய்வங்களை எல்லாம் வேண்டி அழுதாள்.

கவசவாகனங்கள் அடுக்கடுக்காய் நகர்ந்து கொண்டிருந்தன. பராசக்தி தவித்தாள். 'இவை எப்போ போய் முடியும்? அதுவரை பிள்ளைக்கு ஒன்றும் ஆகிவிடக் கூடாது... கடவுளே!... ஏன் இந்தச் சோதனை? எனக்குப் பிள்ளை இல்லாவிட்டாலும் இந்த நாட்டுக்கு ஒரு பிள்ளை...ஓராயிரம் பிள்ளைகள் வேண்டாமா? அட்டூழியங்களுக்கு எதிராகப் பொங்கியெழ இன்னும் எத்தனை எத்தனை இளரத்தங்கள் தேவை!...' என்று... அந்த வீரத் தாயின் உள்ளம் துடிதுடித்துக் கொண்டிருந்தது.

ஒருவாறு கவசவாகனங்கள் போய் முடிந்தன. பஸ் பின்னால் மெல்ல மெல்லத் தொடர்ந்து சென்றது.

பஸ் சாரதி ஆஸ்பத்திரி வாசலின் வரை கொண்டு வந்து விட்டு விட்டுச் சென்றான். ஆஸ்பத்திரி வாசலில் காலடி எடுத்து வைத்த போது வசீகரனின் உடல் சில்லிட்டு விட்டது.

'ஐயோ மகனே... என் ராசா... என்னை விட்டிட்டுப் போயிட்டியே...'— பராசக்தி வீறிட்டு அழுதாள். அவளை யாராலுமே தேற்ற முடியவில்லை.

அழுகையினூடே எதிரே சுவரில் ஒட்டப்பட்டிருந்த குடும்பக்கட்டுப்பாடு பற்றிய விளம்பரப் போஸ்டர் அவளது கண்ணில் பட்டது. 'நாமிருவர்; நமக்கிருவர்...அளவோடு பெற்று வளமோடு வாழ்க...'

பராசக்தி வெறி கொண்டவள் போல ஓடிச்சென்று அந்த விளம்பர போஸ்டரைக் கிழித்து சுக்கு நூறாக்கிய படி 'ஆயிரம் பிள்ளைகள் வேணும், ஆயிரம் பிள்ளைகள் பெறவேணும்... ஓம் நான் பெறுவன்... எப்படியெண்டாலும் பெறுவன்... ஓடுங்கோ... ஓடுங்கோ... எல்லாரும் போய்ப் பிள்ளை பெறுங்கோ...' என்று பைத்தியக்காரிபோலக் கத்திக் கொண்டிருந்தாள்.

[யாவும் கற்பனையே]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதரவாளர்கள் அறிந்தவைதானே.**

எங்கள் தயாரிப்புகள் எங்கள் கையிலிருந்து உங்கள் கைக்கு வருவதற்கிடையில் எத்தனை இடையூறுகள், போக்குவரத்துத் துன்பம், எரிபொருள் தட்டுப்பாடு, மூலப்பொருள் விலையுயர்வு, தொழிலாளர் போக்குவரத்துத் துன்பம் இத்தனை வேதனைகளுக்கு இடையிலும் நாங்கள் உங்கள் தேவைகளைக் கவனிக்கிறோம்.

உங்கள் ஆதரவு எங்களுக்குத் தேவை.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

# சஞ்சீவி

13 - 06 - 1987 சனிக்கிழமை

**ஓர் அறிவித்தல்**

மாணுக்கர்களுக்குரியனவான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, நல்வழி முதலிய நீதிநூல்களும், மில்க்வைற் செய்தியும், ஆரோக்கியத்திற்கு வழிகாட்டுவனவாய யோகாசன நூல்கள், வரைபடங்களும் 10 நீலக்கட்டி மில்க்வைற் மேலுறைகளுக்குக் கிடைக்கும்.

★ மேலுறைகளை அனுப்பி இவற்றை எவரும் பெற்றுக்கொள்ளலாம்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்**

$1\frac{1}{2}$ மணி நேரத்தில் பெங்களூர் - யாழ்ப்பாணம் - பெங்களூர்

# கருணைப் பயணத்திற்கு ஓர் ஒப்பரேஷன் பூமாலை

ஜூன் 3ஆம் இரவு நிவாரண உணவுப் பொருள்களுடன் இந்தியப் படகுகள் அணி ஏமாற்றத்துடன் இராமேஸ்வரம் திரும்பின.

ஜூன் 4 அதிகாலை ஒரு மணியளவில் கோவா மாநிலத்தில் இருந்து பிரதமர் ராஜீவ் காந்தி புதுடில்லி திரும்பினர்.

உடனே வெளிவிவகார அமைச்சின் அரசியல் விவகாரக் குழு உறுப்பினர்களுடன் தீவிர ஆலோசனைகளில் பிரதமர் காந்தி ஈடுபட்டார்.

அதிகாலை 4-30 மணி வரையில் மந்திராலோசனை நடத்தப்பட்டது.

அதனிடையில் பெங்களூருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டாயிற்று.

இந்திய விமானப் படை எயர் மார்ஷல் எஸ். ராகவேந்திரன் கூறுகிறார்:

''நள்ளிரவு வாக்கில் புதுடில்லியில் இருந்து உத்தரவு கிடைத்தது.

''உடனே தேவையான வீரர்கள், விமானங்கள் தயார் நிலையில் பெங்களூரில் வைக்கப்பட்டன.

''பொருள்கள் ஏற்றிச் செல்லும் ஏழு விமானங்கள் (ஏஎன் 32), நான்கு மிராஜ் யுத்த விமானங்கள் பெங்களூருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

''பனி படர்ந்த இமய மலைமீது பொதிகளைக் கொண்டுபோய் இறக்க ஏ. என். 32 ரக விமானங்கள் பாவிக்கப்படுகின்றன.

''நன்கு பயிற்சிபெற்ற விமான மோட்டிகளும் பெங்களூர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

'ஏ.என்.32 விமானங்களில் கடைசி விமானம் வியாழன் பிற்பகல் 2.30 மணிக்குப் போய்ச் சேர்ந்தது.

'25 தொன் உணவுப் பொதிகள், மருந்து ஆகியன நண்பகலுக்கு இடையில் இராணுவ வீரர்களினால் விமானங்களில் ஏற்றப்பட்டன.

### ஒரு மணி நேரம்

'பிற்பகல் 3 மணிக்கு விமானங்கள் யாழ் குடா நோக்கி புறப்படுவதாக ஏற்பாடு.

'செய்தியாளர்களைக் கொண்டு போக வேண்டும் என்ற காரணத்தினால் பயணம் ஒரு மணித்தியாலம் தாமதித்தது.

சரியாக பி. ப. 4-45 மணிக்குக் 'கருணைப் பயணம்' ஆரம்பமானது.

'எமக்கு இருந்த பெரும் பிரச்சினை மிராஜ் யுத்த விமானங்களின் வேகத்துடன் ஏ. என். 32 ரக சரக்கு விமானங்களின் வேகம் எப்படி இணையப்போகின்றது? என்பதுதான்.

ஒலியிலும் பார்க்க மூன்று மடங்கு வேகத்தில் செல்வது மிராஜ் விமானம்.

எப்படியோ நம்மவர்கள் திறமையாகச் செயல்பட்டு விட்டனர்'— இப்படிக்கூறும் எயர்மார்ஷல் ராகவேந்திரன், ''இலங்கைப் பிராந்தியம் மீது பறந்துகொண்டிருந்தபோது விமானங்களுடனுனதொடர்பு 20 நிமிடங்கள் துண்டிக்கப்பட்டுவிட்டன. இது பெரிய பதற்றத்தை ஏற்படுத்திவிட்டது''—என்றும் தெரிவித்தார்.

### ஒப்பரேஷன் பூமாலை

பத்து மணித்தியாலங்கள் திட்டமிட்டு ஒன்றரை மணித்தியாலத்தில் செயலாக்கப்பட்ட இந்தக் கருணைப் பயணத்துக்கு இந்திய விமானப் படை இட்ட பெயர் 'ஒப்பரேஷன் பூமாலை.'

இப்பயணத்தில் ஏழு போக்குவரத்து விமானங்களும் நான்கு யுத்த விமானங்களும் பங்குபற்றின.

ஆனால், 5 விமானங்களில் தான் உணவுப் பொதிகள் கொண்டு வரப்பட்டன.

மற்ற இரண்டு போக்குவரத்து விமானங்கள் தகவல் தொடர்பு, கட்டுப்பாடு ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டன.

சிறு ரக ஆயுதங்களால் சுடப்பட்டால் தாக்கப்படக்கூடிய அளவு உயரத்தில் விமானங்கள் இறங்கிவந்து உணவுப் பொதிகளைப்போட்டன.

'ஒப்பரேஷன் பூமாலை' பயணத்துக்குத் தலைமை வகித்தவர் குரூப் கப்டன் பி. கே. சுந்தர்.

உணவுப் பொதிகளுடன் விமானங்கள் பிற்பகல் 3.53க்கு பெங்களூரில் இருந்து புறப்பட்டன.

மிராஜ் யுத்த விமானங்கள் அதிராம் பட்டினத்துக்கு அருகில் இருந்து புறப்பட்டன.

மாலை 4-47. குரூப் கப்டன் சுந்தர்: ''கொழும்பு ரேடியோ, ஈகிள் மிஷன் 4, கொழும்பு ரேடியோ, இது ஈகிள் மிஷன்-4, உங்களுக்குக் கேட்கிறதா?''

கொழும்பு விமானத் தளத்தில் இருந்து பதில் ஏதும் இல்லை.

ஆனால் சென்னை விமானநிலையம் பதிலளித்தது.

கொழும்பில் இருந்து பதில் ஏதும் வராததினால் ''கருணைப் பயணமாக யாழ் சென்றுகொண்டிருக்கின்றோம்'' — என்று மட்டும் கப்டன் சுந்தர் கொழும்புக்கு தெரிவித்து விட்டு பயணத்தைத் தொடர்ந்தார். சரியாக மாலை 4-57க்கு தலைமை விமானம் யாழ் மீது பறக்க ஆரம்பித்தது.

பலாலி விமானத்தளம் மீதாக இந்தியவிமானங்கள் இரண்டாம் தடவையாகப் பறந்துசென்றன.

இத்தளத்தில் ஒரு விமானத்தைக்கூடகாண முடியவில்லை.

கருணைப் பயணத்தை முடித்துக்கொண்டு சரியாக மாலை 6-13க்கு பெங்களூர் விமானநிலையத்தை விமானங்கள் அடைந்தன.

இப்படிக் கூறுகின்றார், இந்த விமானங்களில் ஒன்றில் யாழ்மீது பறந்து சென்ற ''இந்து'' நாளிதழின் சிறப்புச் செய்தியாளர் மனோஜ் ஜோஷி.

இப்படித்தான் இனிது நிறைவேறியது 'ஒப்பரேஷன் பூமாலை''.

## செய்திச் சாரம்

### வீரமணி வேண்டுகோள்

சென்னை, ஜூன் 12

யாழ் தமிழருக்கு இந்தியா வழங்கும் உணவுப் பொருள்கள் இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்படக் கூடாது.

இப்படி திராவிடர்கழகச் செயலாளர் கி. வீரமணி இந்திய மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்து இருக்கிறார். (உ-எ)

### தூதரகம் முன் 45 பேர் கைது

சென்னை, ஜூன் 12

இலங்கையில் இடம் பெறும் இனக்கொலைகளைக்கண்டித்து சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முன் மறியல் செய்ய முயன்ற சுமார் 45 விஷ்வ இந்து பரிஷத் தொண்டர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். (உ-எ)

### தெல்லிப்பளையில் ஒருவர் காயம்

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினால் தெல்லிப்பளையைச் சேர்ந்த எஸ். சிறீஸ்கந்தராசா என்பவர் காயமடைந்தார்,

பலாலி முகாமில் இருந்து ஏவப்படும்ஷெல் குண்டுகள் தற்பொழுது தெல்லிப்பளை, அம்பனை பகுதிகளிலும் விழுந்து வெடிக்கின்றன, [உ-10]

### கூட்டம்

ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளரைத் தெரிவு செய்ய இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுவின் கூட்டம் நாளை ஞாயிறு புதுடில்லியில் நடைபெற இருக்கின்றது. [உ-எ]

# ஸ்ரீலங்கா மீது குண்டுமாரி பொழியக் கோருகிறார் கருணாநிதி

சென்னை, ஜூன் 12

அடுத்த முறை இந்திய விமானங்கள் ஸ்ரீ லங்காவில் குண்டுமாரிபொழிய வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி முன்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலையைச் சண்டித்து அண்மையில் மௌன ஊர்வலம் ஒன்றை தி. மு. க நடத்தியது அல்லவா!

அதன் முடிவில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. மு. கருணாநிதி இப்படிச் சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

இலங்கைத் தமிழர்களின் துன்பங்களைத் துடைக்க இந்திய அரசு நான்கு வருடங்களாகத் தவறிவிட்டது.

படகுகளில் உணவுப் பொருள்களைக் கொண்டு போய் யாழ் மக்களுக்கு வழங்க இலங்கை மறுத்ததைத் தொடர்ந்து தான், விமானம் மூலம் உணவுப் பொதிகள் போடப்பட்டன.

இந்த மனிதாபிமான உதவியை ஓரளவுக்கு வரவேற்கின்றோம்.

ஆனால் அடுத்தது என்ன?

இலங்கை அரசு நடத்தும் இனப்படுகொலையை நிறுத்த இந்திய அரசு எடுக்கப்போகும் சுடுமையான நடவடிக்கைகளுக்கு இது ஒரு முன்னோடியா?

ஆனால் விமானப்பொதிகள் போட்ட அடுத்த இரண்டு தினங்களாக நடந்த சம்பவங்கள்



ஊக்கம் தருவனவாக இல்லை.

மீண்டும் பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற பழைய அணுகுமுறையை நாடி இந்தியா செல்வது போல் தெரிகின்றது.

ஈவிரக்கமற்ற முறையில் தமிழர்களைக் கொன்றுகுவிக்கும்போது நல்லுறவுஅடிப்படையில் இலங்கையுடன் நாம் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்த வேண்டுமா?

விமானம் மூலம் உணவுப் பொதி போட்டது ஏதோ தமிழரின் இன்னல்களுக்கு தீர்வுகண்டுவிடும் என்று எண்ணி பாராட்டுக்கள் தெரிவிக்கிறார்கள்.

தமிழ் ஈழம் அடைவதற்காக தனித்து நின்று போராடுபவர்களுக்கு இந்திய அரசு பாதுகாப்பு அளிக்குமா என்பதே இப்போதைய கேள்வி ஆகும்.

விமானம்மூலம் உணவுப்பொதி போட்ட நடவடிக்கைக்கு 'ஒப்பரேஷன் பூமாலை' – என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். இது துரதிஷ்டவசமானது.

செத்துக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழருக்கு இன்று தேவை பூமாலை அல்ல.

அவர்களுக்குத் தேவை ஆயுதங்கள். கொலைசெய்பவர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள அவர்களுக்கு ஆயுதங்கள் தேவைப்படுகின்றது.

அமைதிப் பேச்சுக்கள் என்றபோர்வையில் மீண்டும் காலத்தைக் கடத்த ஜெயவர்த்தன அரசு முயற்சிக்கும்.

இம் முறை இடங் கொடுத்தால் ஸ்ரீலங்கா மீது பறக்கும் இந்திய விமானங்களைச் சுட்டு வீழ்த்தக் கூடியஅளவுக்கு ஸ்ரீலங்கா தன்னைப் பலப்படுத்திக் கொண்டு விடும்.

இலங்கைத் தமிழர் படுகொலைக்குள்ளாவதை கண்டித்து கவலை தெரிவிக்கவே மௌன ஊர்வலம் நடத்தப்பட்டது.

இதற்கு இந்திய அரசு சரியான நடவடிக்கை எடுக்காவிட்டால் பெரிய நிர்ப்பந்தம் கொடுக்கும் இயக்கத்தை தி. மு. க நடத்தும்.

—இப்படி திரு. கருணாநிதி சொன்னார். (உ-எ)

## உணவுப் பொருள்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

இந்த உறுதிமொழியை நம்பியே, உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பற்குணம் தமது சக ஊழியர்களுடனும், தொழிலாளர்களுடனும் நேற்றுக் காலை 8 மணிக்கு மாவிட்டபுரம் சென்றார்.

### நடந்து சென்றனர்

ப. நோ. கூ. சங்க லொறிகளை தெல்லிப்பளைச் சந்தியில் முன் எச்சரிக்கையாக நிறுத்தி விட்டு ஊழியர்கள் நடந்து சென்றனர்.

மாவிட்டபுரத்தில் எந்த ஒரு தமிழ் பொலீஸாரும் காணப்படவில்லை.

மாறாக மாவிட்டபுரம் அலுமினியத் தொழிற்சாலையிலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

சகல தொழிலாளர்களும், ஊழியர்களும் மயிரிழையில் உயிர் தப்பி ஓடி வந்தனர்.

ஒரு மணி நேரம் தெல்லிப்பளையில் தங்கி நின்ற ஊழியர்கள் மீண்டும் பத்து மணி அளவில் மாவிட்டபுரம் நோக்கிச் சென்றனர்.

அப்போது காங்கேசன் துறைப் பகுதியிலிருந்து மாவிட்டபுரம் நோக்கி பாரிய ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதனால் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி தமது ஊழியருடன் இரண்டாவது முயற்சியையும் கைவிட்டுத் திரும்பினர்.

### மூன்றாவது முயற்சி

அதன்பின்னர் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி உடுவிலிலுள்ள றெட்பானா தொண்டர் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டார்.

அவர்கள் தாம் இராணுவத்துடன் தொடர்பு கொண்டதாகவும் சுஞ்சியம் செல்ல எதுவித இடையூறும் இராது என்றும் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து திரு. எஸ். பற்குணம் றெட்பானா, குழந்தைகள் நிதியம் ஆகியவற்றைச்சேர்ந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் மூன்றும் தடவையாக மாவட்டபுரம் நோக்கிச் சென்றார்.

இந்தத்தடவை பலாலி காங்கேசன்துறை, மாவிட்டபுரம் பகுதிகளிலிருந்து சிப்பாய்கள் மும்முனைத் தாக்குதல்கள் நடத்தினர். ஷெல், துப்பாக்கித்தாக்குதல்களால் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் ஊழியர்களும் மீண்டும் மயிரிழையில் உயிர் தப்பி வெறுங்கையுடன் திரும்பினர்.

இராணுவத்தினரின் இத்தகைய நடவடிக்கைகளைக் கண்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அதிர்ச்சியடைந்தனர்.

ஏற்கனவே முன் அறிவித்தலுடன் சென்றும், சிப்பாய்கள் தாக்குதல் நடத்தியதையிட்டு தமது அதிருப்தியை வெளிப்படையாகத் தெரிவித்துக் கொண்டனர்.

### முந்தியும் நடந்தது

இதேபோல் சென்ற மாதம் 21ம் திகதி, இராணுவ உயர் அதிகாரிகளின் முன்அனுமதியுடன் காங்கேசன்துறைசென்ற அரச அதிபர் தலைமையிலான குழு ஒன்றும் துப்பாக்கிப் பிரயோகம் மூலம் திருப்பியனுப்பப்பட்டிருந்தது.

அந்தச் சம்பவத்தில் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி காயமடைந்திருந்தனர். (அ-ள)

## ஸ்ரீலங்கா---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்துவேன்.

ஸ்ரீலங்காவின் இறைமையை அவமதிக்கும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை.

ஸ்ரீலங்காவின் இனப் பிரச்சினை அடைந்து வரும் புதிய பரிமாணங்களினால் இந்தியாவின் பாதுகாப்பு சூழ்நிலைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழருடன் பேசிப் பிரச்சினையைத் தீர்க்கும்படி ஸ்ரீலங்காவை கடந்த மூன்றுண்டுகளாக இந்தியா வற்புறுத்தி வந்தது.

ஆனால் கொழும்பு அரசில் இடம்பெற்றுள்ள தீவிரப்போக்குக் கொண்டவர்களினால் இது சாத்தியமாகவில்லை. ஏற்கப்பட்ட யோசனைகளில் இருந்து ஸ்ரீலங்கா பின் சென்றுள்ளது.

— இப்படி அமைச்சர் திவாரி சொன்னார். (உ-எ)

## மனிதாபி---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

படுவது சிறப்பு மிக்கது.

''1971 இல் கிழக்கு வங்காளிகளைப் படுகொலையில் இருந்து மனிதாபிமான முறையில் இந்தியா காப்பாற்றியது''— இப்படி செனட்டர் ஸோலர்ஸ் கூறியிருப்பது, இலங்கைத் தமிழருக்கு 'மனிதாபிமான' ரீதியில் உதவ இந்தியா எடுக்கலாம் என்று கூறப்படும் துணிகர நடவடிக்கைகளுக்கு 'பச்சை விளக்கு' காட்டுவது போல் அமைந்து விட்டது.

★★★★★★★★

★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

★★★★★★★

**இடவசதி**

வியாபார ஸ்தாபனங்கள் இணைந்து செயற்படவும் பலவிதபொருட்களை ஒரே இடத்தில் விற்பனை செய்யவும் கட்டிட இடவசதி கோப்பாய் சந்திக்கு அருகாமையில் உள்ளது. விபரங்களுக்கு: மு. சிவலோகநாதன், 443, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் அல்லது சோ. லோகேஸ்வரன். சட்டத்தரணி, கொழும்புத்துறை அல்லது கிளுவானை ஒழுங்கை, கோப்பாய். (1417)

# மாவை ஆலயப் பாதுகாப்பை உறுதி செய்யக் கோரிக்கை

கோயிலினுள் ரூ. 60 லட்சம் பெறுமதியான பொருள்கள்

### அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 13

பாதுகாப்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோயிலுக்குரிய பொருள்களின் பாதுகாப்பை உறுதி செய்து தரும்படி, யாழ்ப்பாணம் அரச அதிபருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆலய பிரதம குரு மகாராஜஸ்ரீ எஸ். டி. சண்முகநாத குருக்கள் அரசாங்க அதிபருக்கு அனுப்பிய சடிதம் ஒன்றில் இவ் வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

கடந்த 7 ஆம் திகதி காலை 7 மணியளவில் யாழ்ப்பாணம் வானொலி அறிவித்த ஊரடங்கு அறிவித்தலைத் தொடர்ந்து நான் எனது குடும்பத்துடன் பாதுகாப்புத் தேடி வேறிடம் சென்றேன்.

இதனால் ஆலயத்தில் உள்ள தங்கம், வெள்ளி நகைகள் மற்றும் பொருள்களை அகற்றிக் கொண்டுபோக முடியவில்லை.

இப் பொருள்களின் பெறுமதி சுமார் 60 லட்சம் ரூபாவரை இருக்கும்.

இப்போது கோயில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதாக அறிகிறேன்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி அங்கு உள்ள பொருள்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்த நடவடிக்கை எடுங்கள்.

- இப்படி மகஜரில் கோரப்பட்டுள்ளது. (உ-எ)

### கோட்டை வேட்டினால் காயம்

யாழ்ப்பாணம், ஜூன்13

நேற்று சின்னக்கடைப் பகுதிக்குச் சென்ற சுந்தசாமி தர்மராசா (வயது 47) என்ற நபர் கோட்டை இராணுவத்தினரின் சூட்டுக்கு இலக்காகி கையில்காயமடைந்தார். (உ-10)

# சாக்கு மூடையில் விலைமிக்க பொருள்கள் அநாதரவாகக்கிடந்தன

அச்சுவேலி, ஜூன் 13

அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்திற்கு அருகில் அநாதரவாகக் கிடந்த சாக்கு மூடையில் ரேடியோ, மணிக்கூடு, ஒலிபெருக்கிச் சாதனங்கள் மற்றும் ஆடம்பரப் பொருள்கள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன.

மூடையைக் கண்டெடுத்த பொதுமக்கள் சூசையப்பர் ஆலய குருவண பிதா பெனுட் ரெஞ்சோ அடிகளிடம் அவற்றை ஒப்படைத்தனர். அவர் அந்தப் பொருள்களை அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைத்தார்.

இந்தப் பொருள்கள் தென்மூலைப் பகுதியில் உள்ள வீடுகளில் களவாடப்பட்டு படையினரால் கொண்டு செல்வதற்கு தயாராக இருந்ததாகவும், எதிர்பாராத விதமாக அவை தவறவிடப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. (உ-11)

## உடுப்பிட்டியில் நேற்று மோதல்?

யாழ்ப்பாணம், ஜூன்13

வடமராட்சியின் உடுப்பிட்டிப்பகுதியில் நேற்று போராளிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையில் பெரும் மோதல் நிகழ்ந்ததாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

உடுப்பிட்டியில் மீண்டும் முகாம் ஒன்றை அமைப்பதற்கு படையினர் முயற்சித்த போதே இந்த மோதல் மூண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் மோதல் குறித்து ஊர்ஜிதப்படுத்தப்பட்ட செய்திகள் ஏதும் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (உ-ள)

## விமானம் வீழ்த்தப்பட்டது

காபூல், ஜூன் 12

ஆப்கானிஸ்தான் எல்லைப் புறத்தில் ஆப்கானின் பயணிகள் விமானம் ஒன்றை கிளர்ச்சிக்காரர்கள் வியாழனன்று சுட்டு வீழ்த்தினர்.

53 பயணிகள் இதனால் உயிரிழந்தனர். இருவர் மட்டுமே உயிர்தப்பினர். (உ-எ)

**காணவில்லை**

துன்னாலை வடக்கு கரவெட்டியைச் சேர்ந்த S. மாணிக்கம் என்பவர் 25-05-87 யாழ்ப்பாணம் சென்று, திரும்பவும் கரவெட்டிக்கு செல்வதாகக் கூறிச் சென்றவர் இன்னும் அங்கு வந்து சேரவில்லை. இவரைக் கண்டவர்கள் உடனடியாக தயவு செய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு அறிவிக்கவும்.

S. மாணிக்கம்
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(1418)

## சார்க்----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதை உறுதிப்படுத்துமுகமாக நேற்று இந்தியத் தூதர் டிக்ஸிற், வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீதைச் சந்தித்த பின்னர் இம்முடிவு எடுக்கப்பட்டது.

வெளியுறவுச் செயலாளர் மட்டப் பேச்சுக்கள் நாளை ஞாயிறு ஆரம்பமாகி, இரண்டு தினங்கள் நடைபெறும்.

அதன் பின்னர் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு நடைபெறும்.

இந்திய விமானங்கள் யாழ்ப்பாணத்தில் உணவுப் பொதிகள் [illegible] டத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. (உ-எ)

**விற்பனைக்கு**

ஒருநாள் கோழிக்குஞ்சு

BAIRAHA FARMS HISEX பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

சற்குணராஜா பிறதர்ஸ்
பிரம்படி, கொக்குவில்.

(1419)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 13-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Saturday June 13, 1987

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org